# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 02 புதன்கிழமை (15-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:94


## செம்மணி புதைகுழி விவகாரம்

# ஐந்து படையினரே நேற்று ஆஜர்

# பொலீஸார் ஒருவர் தலைமறைவு!

## பலத்த பாதுகாப்புடன் நீதிமன்ற விசாரணை

யாழ்ப்பாணம்,மார்ச் 15

**செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பாக சந்தேக நபர்கள் எனக் கருதப்படும் நான்கு படையினர் மற்றும் இரு பொலீஸாரில் ஐந்து பேரே நேற்று யாழ். மேலதிக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.**

**பொலீஸாரில் ஒருவர் தலைமறைவாகியுள்ள தாகவும் படையினரில் மற்றொருவரும் உயிரிழந்து விட்டதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.**

**ஆஜர் செய்யப்பட்ட ஐந்து பேரையும் இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.**

யாழ்.மேலதிக நீதிமன்ற அமர்வு நேற்றுப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் இடம்பெற்றது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதிமுதல் 22ஆம் திகதி வரை செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணிகளின்போது 15 எலும்புக்கூடுகள் மற்றும் எச்சங்கள் என்பன மீட்கப்பட்டிருந்தன.

இந்த எலும்புக்கூடுகளை ஆய்வு செய்த நிபுணர்குழு சம்பந்தப்பட்டோர் கொலை செய்யப்பட்டமைக்கான தடயங்கள் உள்ளதாக நீதி

(12 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டோரில் கப்டன்கள் மூவரையும் (சீருடையில்) பொலீஸ் கான்ஸ்டபிளையும் (சிவில் உடையில்) இப்படத்தில் காணலாம்.



சக்கரநாற்காலியில் அழைத்துவரப்பட்ட படை அதிகாரியான லெப்டினன்ட் யட்டகம கமகே அத்துல உதயகுமார.

*படங்கள்: பொ.இராஜேஸ்வரன்.*

## இருவர் உயிரிழந்ததாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்15

செம்மணி விவகாரம் தொடர்பாக யாழ்.நீதிமன்றத்தால் கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட படையினரில் இருவர் உயிரிழந்து விட்டனர் என்று யாழ்.நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

லெப்டினன்ட் டுனுகல என்பவர் கிளிநொச்சியில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் 21.05.99இல் அங்கு விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற சண்டையில் உயிரிழந்ததாகவும் -

சிப்பாயான விஜயானந்த அல்விஸ் சம்பவமொன்று தொடர்பாக விளக்கமறியலில் இருந்த சமயம் 98ஆம் ஆண்டு உயிரிழந்ததாகவும்-

அரச சட்டத்தரணி யசந்த கோத்தாக்கொட நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

(ஐ-3-9)

## தெற்கிலிருந்து சட்டத்தரணிகள் வருகை

யாழ்ப்பாணம், மார்ச 15

யாழ் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட படையினருக்கு ஆதரவாக வாதிடுவதற்கு கொழும்பில் இருந்து ஐந்து சட்டத்தரணிகள் யாழ்பபாணம் வந்திருந்தனர்.

(ஐ-3)


இப்பொழுது.....

உதயன்

இணையப் பதிப்பு

அனைத்துலகிலும் வாழும் தமிழ் மக்கள் வாசிக்கலாம்.

இணைய முகவரி :

www.uthayan.com


## மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில்

# தலை, நெஞ்சுப் பகுதிகள் பலமாக தாக்கி உடைக்கப்பட்டிருக்கின்றன

### திட்டமிட்ட கொலைகள் என நீதிவான் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்15

செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின் போது மீட்கப்பட்ட 15 எலும்புக்கூடுகளுக்கும் உரியவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பு வழங்கினார்.

நேற்று நீதிமன்றம் கூடியபோது, செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான மரணவிசாரணைத் தீர்ப்பை நீதிவான் வழங்கினார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:-

ஆகக் குறைந்தது 15 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் இளவயது நபர்களுடையவை. அவற்றில் ஒன்று மட்டுமே பெண்ணினுடையது. ஒன்றில் மட்டுமே வெட்டுக் காயம் உள்ளது. ஏனையவர்கள் அனைவரும் தடிகள், பொல்லுகளால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். பெரும்பாலும் மூளை, முகம், நெஞ்சுப் பகுதிகளே அடித்து எலும்புகள் உடைக்கப்பட்டுள்ளன. ஒன்றில் கூட சூட்டுக்காயம் ஏதும் இல்லை. ஓர் எலும்புக்கூட்டுக்குரியவர் கண்கள் கட்டப்பட்ட பின்னர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். ஒரு சடலத்துக்குரியவரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் ஐவரையும் பொலீஸாரின் பாதுகாப்பில் வைக்க நீதிவான் மறுப்பு!

### வெலிக்கடையில் தடுத்து வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம்,மார்ச்15

செம்மணி விவகாரம் தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட படையினரை அவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இராணுவப் பொலீஸாரின் விளக்கமறியலில் வைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை யாழ்.மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் நிராகரித்துவிட்டார்.

சந்தேகநபர்களான படையினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிவானிடம் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

பிரஸ்தாப நால்வரும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் படை அணிகளில் முக்கிய நபர்களாக இருப்பதால் அல்லது இருந்திருப்பதால் புலிகளின் தாக்குதல் இலக்காக இவர்கள் இருக்கக் கூடும்.

அத்துடன் இவர்கள் பல நடவடிக்கைகளில் சிறப்பாகப் பணியாற்றி பல பதக்கங்களைக் கூடப் பெற்றுள்ளனர்.

இதனால் இவர்களை நீதிமன்றக் காவலில் சிறையில் விளக்கமறியலில் வைக்காமல், இராணுவப் பொலீஸாரின் காவலில் வைக்கும்படி உத்தரவிட வேண்டும் என்று அவர் கோரினார்.

ஒரு படை அதிகாரி கடமையில் இருக்கும்போது குற்றமிழைத்திருந்தால் அவர் இராணுவப் பொலீஸாரின் அல்லது அவரின் மேலதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்படலாம் என்று அவசரகாலச் சட்ட விதிகளில் கூறப்பட்டுள்ளது என்றும் அவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நீதிமன்றுக்கு வெளியே அன்னையர் ஒப்பாரி!

### மண்ணை வீசித் திட்டித் தீர்த்தனர்

யாழ்ப்பாணம், மார்ச்15

செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான சந்தேக நபர்களான படையினர் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சமயம் யாழ்.நீதிமன்றத்துக்கு வெளியே காணாமற்போனோரின் பெற்றோர், உறவினர்கள் நூற்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் திரண்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையில் அன்னையர்களும் யுவதிகளும் நேற்று விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்ற வளவில் கூடி நிற்கக் காணப்பட்டனர்.

விசாரணைகள் முடிவடைந்து சந்தேக நபர்களான நான்கு படை அதிகாரிகளும் நீதிமன்றுக்கு வெளியே அழைத்துவரப்பட்டு வாகனத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு காலை முற்றாக இழந்த நிலையில்

# படை அதிகாரிகளில் ஒருவர் சக்கரநாற்காலியில் வந்தார்

யாழ்ப்பாணம்,மார்ச்15

நேற்று ஆஜர் செய்யப்பட்ட நான்கு படை அதிகாரிகளில் ஒருவரான லெப்டினன்ட் கமகே அத்துல உதயகுமார சக்கரநாற்காலியிலேயே நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற சண்டையில் ஒரு காலை இடுப்புக்குக் கீழே முற்றாக இழந்திருந்ததால் அவர் சிவில் உடையுடன் சக்கரநாற்காலியில் அழைத்துவரப்பட்டிருந்தார்.

ஒரு வருட காலத்துக்கு மேல் அவர் சிகிச்சை பெறவேண்டியுள்ளது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உபாத்தியார் என அன்போடு அழைக்கப்பட்ட சங்கரப்பிள்ளை



## உபாத்தியார் சங்கரப்பிள்ளை

ஆசாரமிக்க மக்கள் வாழுமிடம் கல்வயல். கமத்தொழிலைத் தமது சீவாதாரமாகக் கொண்டு வாழ்ந்த கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளுக்கு நான்கு ஆண்களும் ஒரு பெண் ணும் பிள்ளைச் செல்வங்களாக இருந்தனர்.

பண்டிதர் வேலுப்பிள்ளை மூத்தவர். சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோயில் உயர்ச்சிக்கு உந்துகோலானவர்.

உபாத்தியார் சங்கரப்பிள்ளை இரண்டாமவர். இவரும் ஒரு பண்டிதராவார். கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் கல்வயலில் உரிமையும் தொடர்பும் வைத்திருந்தாலும் மீசாலையின் மகனாகவே வளர்ச்சி பெற்றார்.

மீசாலை தெற்கு விதானையாராக இருந்த வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வி இரத்தினத்தை மணக்கோலத்தில் ஏற்றதன் மூலம், புகுந்த இடத்திலேயே இல்லமமைத்து இல்லறவியலில் இன்பங்கண்டார்.

மக்கள் இருவருக்குத் தந்தையானார். மூத்தவர் வைத்தியக்கலாநிதி ஜெயநாதன், இளையவர் பொறியியற் கலாநிதி சிவலோகநாதன் ஆவார்கள். இருவரும் லண்டனில் இலங்கி விளங்குகின்றனர்.

எல்லோராலும் 'உபாத்தியார்' என அன்போடு அழைக்கப்பட்ட சங்கரப்பிள்ளை அவர்கள் நெற்றியிலே வெண்ணீறு, வெள்ளைவேட்டி, நாசனல் சட்டை, அதற்குமேல் நன்கு மடித்த உத்தரீயம் ஆகியவற்றுடன் காணப்படுவார். எந்தக் குளிரிலும் வீட்டில் சட்டைபோட்டுக் கொள்ளாத பழக்கத்தால் குளிர் அவருக்கொரு பொருளல்ல. கல்வியோடு கடின உழைப்பும் குளிர் அவரைவிட்டு விலகியிருக்கச்செய்தது.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மாவனெல்லை அ.த.க பாடசாலையில் ஆசிரியராகப் பணியை ஆரம்பித்தார். பின்னர் நாவலப்பிட்டி, புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள அ.த.க பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றிய அவர் இராமநாதபுரம், அல்லாரை, கச்சாய் ஆகிய இடங்களிலுள்ள அ.த.க பாடசாலைகள், சரசாலை ஸ்ரீகணேச வித்., சரசாலை சரஸ்வதி வித்., மீசாலை அமெரிக்கமிஷன் (பழம் பள்ளிக்கூடம்) என்று தொடர்ந்து ஈற்றில் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றார்.

ஆசிரியர் - அதிபர் கடமைகளுக்கு இவர் ஒரு வரைவு இலக்கணமாவார். மாணாக்கரைக் கல்வியில் உயர்த்துவதில், நேரத்திற்குக் கடமைக்குச் செல்வதில், விடுகையில் நில்லாது விடுமுறைக்காலத்திலும் பாடசாலையில் நின்று அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

கல்விப் பணியோடு சமயப் பணியிலும் அணியாக இருந்தார். சைவ சித்தாந்தத்தில் தன்னை ஆழப்படுத்தி, சைவத்தின் வளர்ச்சிக்கு வளமிட்டார்.

மாவனெல்லை சிவன், உருத்திரபுரம் சிவன், கல்வயல் வேதவனப்பிள்ளையார், மீசாலை மாவடிப்பிள்ளையார், மீசாலை இருபத்திப் பிள்ளையார், மண்டுவில் குமரக்கோட்டம், மீசாலை பன்றிக்கேணி கந்தசாமி ஆகிய கோயில்களின் புனருத்தாரணத்திலிருந்து தேர்த் திருப்பணிவரை இவரது கைபட்டுத்துலங்கிக் கொண்டிருக்கின்றன.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினராக இருந்து மாற்றாரும் மதிப்பிடும் சேவையினைச் செய்தார்.

தமிழார்வமிக்க அவர் தமிழ்க்கலையினை வளர்த்திட, நுண்கலையிலடங்கிய மிருதங்கத்தினைத் தன் புதல்வர்கள் இருவரும் பழகிடச் செய்து, அரங்கேற்றி மகிழ்ந்ததோடு, பேரப்பிள்ளைகளையும் பழகிடத் தூண்டி, லண்டனில் நடந்த அவர்களின் அரங்கேற்றத்திலும் கலந்து இன்பம் கண்டார்.

காலச்சூழ்நிலையால் நீண்டு நெடிது பிரிந்திருக்கும் அவரது மக்கள், தங்களுக்கு அவர் உபாத்தியாராகவும் மீசாலை மக்கள் பலருக்கு அவர் தந்தையென அமைந்து, அம்மக்களை அவர் உயர்த்திட ஆற்றும் பணியினையும் அவருக்கு அவர்கள் உதவிட்ட விதத்தையும் கண்டு வியந்தனர்.

தென்மராட்சி மக்கள் அனைவருமே வலிகாமம் மக்களின் இடப்பெயர்வுக்கு உதவினர். இவரது உதவி பிறக் கணிப்புக்குள் அடங்கியதொன்றோடு சைவ உலகம் போற்றுதற்கொன்றாகும்.

இலங்கைச் சைவர்களின் குருமகரிஷி நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் வலிகாமம் இடப்பெயர்வின்போது ஆதீனம் அமைத்தது இவரது இல்லமாகிய கந்தகிரியிலாகும்.

அந்த நேரத்தில் பிராமண சமூகத்தின் நொந்த நிலையை உணர்ந்து, செஞ்சிலுவைச் சங்க ஆதரவோடு அவர்களுக்குப் பாத்திரங்களும் குடும்பத்திற்குத் தலா ஆயிரம் ரூபாவும் வழங்க நண்பர்களுடன் சேர்ந்து வழிகோலினார்.

21-03-1921 இல் கல்வயலில் கண்விழித்து 16-01-2000 இல் மீசாலையில் கண்ணை மூடிக் கொண்ட இவர் ஒரு பரோபகாரியாக, அறக்காவலராக, சிந்தனையாளராக, சேவையாளராக, அதிகாரியாக, அரசியல்வாதியாக, சமயாசாரியாராக, குடும்பத்தராக எதிலும் வெற்றி காணும் வீரராக விளங்கினார்.

**- அ. பொ. செல்லையா -**

அன்பர்களுக்கு-

**இவரது இல்லக் கிருத்தியங்களும் சபீண்டிகரணமும் நாளை (16-3-2000) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.**

**சி. நாகலிங்கம்**
(பெறாமகன்)

கந்தகிரி, மீசாலை.

(74462)

## ST. PATRICK'S COLLEGE OLD BOYS' ASSOCIATION

**யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி 150 ஆவது ஆண்டு நிறைவுறும், புத்தாயிரமாம் ஆண்டில் பாதுகாவலரின் தினத்தில் நிறுவன வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் அரும் பணியாற்றும் அருட்தந்தையர்களான அதிபர், துணை அதிபர், பகுதித் தலைவர்கள், மாணவச் செல்வங்களுக்கும் கல்லூரி ஆளணியினருக்கும் நலமுடன் பணியாற்றி நீடுழிவாழ, இறை ஆசீரை இறைஞ்சி, இதயம்கனிந்த நல்வாழ்த்துக்களை நாம் நல்குவதில் உவப்பிலா உவகையடைகின்றோம்.**

***பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்.***

குறிப்பு :- சங்க உறுப்பினர்களையும் அவர்களது மனைவியரையும் திரிதின ஆராதனைகளிலும் (மாலை 5.30 மணி) பெருவிழாத் திருப்பலியிலும் (காலை 7.00 மணி) தொடர்ந்து காலை உணவிலும் பங்கு பற்றுமாறு அதிபர் அழைக்கின்றார்.

***- உதவிச்செயலாளர்***

(74485)

## நீங்கா நினைவில் முதலாம் ஆண்டு

மண்ணில் 25 - 03 - 1927



விண்ணில் 26 - 03 - 1999

### அமரர் மாணிக்கம் சிவப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திதி - 15-03-2000

திதி: பங்குனி பூர்வபக்கத் தசமி

**ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாதையா நம் துயரம்
என்றென்றும் உங்கள் நினைவு மாறாதையா**

அன்பகலாத

**சகோதர், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

கப்புதூ,
கரவெட்டி.

(C/11350)

## நினைவகலா 100 ஆண்டுகள்

தோற்றம் 15 - 03 - 1899



மறைவு 11 - 04 - 1976

அமரர்

### தாமோதரம்பிள்ளை செல்லையா

(பழைய மாணவன், மானிப்பாய் இந்துக்கல்லூரி)
(Retd, Malayan Pensioner, Survey Department, Taiping, Perak, Malasiya)

**பெற்றதவப் பேறனைத்தும் உவப்புடனே செய்துவைத்து
கற்றுயர்ந்து காசினியில் நயப்புடனே வாழவைத்து
நற்றவத்துச் சேயரெமில் மகிழ்ந்திருந்த தந்தையரே
சற்குருவின் பாதமலர் பல்லாண்டு வாழியநீர்!**

நெஞ்சகலா நினைவுடன்

**திருமதி மகேஸ்வரி நடராஜா** (மகள்)
**அமரர் K.C நடராஜா** (மருமகன்)
Retd. Asst. Valuer - Jaffna
**திரு. செல்லையா தெய்வேந்திரன** (மகன்)
Retd. Cleansing Inspector Municipal Council, Jaffna
**திருமதி நிமலசோபிதா (சந்திரா) தெய்வேந்திரன்** (மருமகள்)
**அமரர் செல்லையா பரம்சோதி** (மகன்)
Retd. Executive Engineer, Buildings Dept.
**திருமதி யசோதரா பரம்சோதி** (மருமகள்) மற்றும்
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*No.37, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குழி
யாழ்ப்பாணம்.*

(C/11388)

# இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய
## சித்திரத்தேர்
# வெள்ளோட்ட விழாச் சிறப்புமலர்

**15 - 03 - 2000 மாலை 3-00 மணி**

## மகோற்சவ குருவின் அருளாசி

சோழ இளவரசி மாருதப்பிரவீக வல்லியின் யானை விழுந்து வணங்கியதால் ஆனைவிழுந்தான் எனும் தலப் பெயரைக் கொண்ட வரலாற்று முக்கியத்துவமும், தெய்வீக மகிமையும் பொருந்திய புராதன ஆலயம் இது.

இங்கு 1976 இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்துக்குப்பின் இடம்பெயர்வு காரணமாகத் தடங்கலுற்றிருந்து, மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பெற்று 1999இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இப்பொழுது முதன் முறையாக மகோற்சவம் ஆரம்பமாகிப் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் புதுப்பொலிவுடனும் அருட் பொலிவுடனும் நிகழ்கிறது.

சைவ அடியார்கள் எல்லாரும் சித்திரத்தேர் வெள்ளோட்டத்தைத் தரிசித்து விநாயகப் பெருமானின் அருளைப் பெற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சிவாச்சார்ய மணி
**சிவஸ்ரீ இராமபாலச்சந்திர குருக்கள்**
**ஆதீன குரு.**

## ஸ்தபதியின் செய்தி

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகப் பெருமானுக்குப் புதிய சித்திரத் தேர் அமைத்து வெள்ளோட்ட விழாக்காணும் இவ்வேளையில் எமது குரு அமரர் சிற்ப மேதை செ. கந்தசாமி, எமது கன்னித்தேர் ஓட்டத்தில் ஆசி தந்த அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, ஈழத்தின் தலைசிறந்த கலைஞர்கள், அருளாளர்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வணங்குகின்றேன்.

இந்தத் தெய்வீகத் திருப்பணியில் பங்கு கொண்ட தேர்த்திருப்பணி உபயகாரர்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும், அடியார்களுக்கும், ஞானமுதல்வனாகிய விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

செ. பாலச்சந்திரன்
ஸ்ரீகாளிகா சிற்பாலயம்.

## வரலாற்றுப் பெருமை

ஆதி அந்தமிலா ஆன்ம நாயகராகிய அருட்சோதி வடிவுடை விநாயகர் தான் தோன்றியாக எழுந்தருளி இனிது வீற்றிருக்கும் அருளுடை ஆனைவிழுந்தான் திருப்பதி பலநூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமையுடையது. [illegible] மட்டுமல்ல ஆனையும் [illegible] தொழும் அற்புத சக்தி வாய்ந்தது இடம் பெயர்வும் நிலைதளர்வும் ஏற்பட்ட போதும் அருட்சக்தியில் குறைவுபடாது நாட்டையும் மக்களையும் பரிபாலித்து நிற்பது. மீளக்குடியமர்ந்த இளவாலை மக்களின் உயிர்த்துணையாய் அருள் பாலித்து வருவது. அருள்மிகு விநாயகரின் அற்புதசக்தியால் இப்புத்தாயிரம் ஆண்டில் (2000) கொடியேற்றமும் மகோற்சவமும் – நடைபெறுவதுடன் உற்சவம் உற்பவித்த வருடத்திலேயே சித்திரத் தேரோட்டமும் நடைபெறவிருப்பது தெய்வீகத்தின் உச்ச நிலையைப் புலப்படுத்துகின்றது.

இச்சம்பவம் வலி. வடக்கின் சுபீட்சத்துக்கு ஒரு விடிவிளக்காகச் சுடர் விடுகின்றது. விநாயகப் பெருமான் ஆனை விழுந்தான் கிராமத்திற்கு மட்டுமன்றி, வலி. வடக்குக்கு மட்டுமன்றி, ஈழத்தமிழர்களுக்கு மட்டுமன்றி, உலகம்வாழ் தமிழர்கள் அனைவருக்கும் உயிராயும் ஒளியாயும் உடனிருந்து சாந்தியையும், அமைதியையும் சமாதானத்தையும் நல்குவாராக எனப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி பத்தினியம்மா**
**திலகநாயகம் போல்.**
மேலதிக அரச அதிபர்

## ஆனைவிழுந்தானின் அருட்பிரவாகம்



ஈழத்தின் பழம்பெருமையும் அருள் மகிமையும் மிக்க கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தன் ஆலயம் என்பவற்றின் அருட்சாரலில் யாழ்ப்பாணத்தின் வடக்குக்கரையில் அமைந்துள்ளது இளவாலை.

இளவாலையின் தென் முனையில் பெரியவிளான் வடசேரிப் பிள்ளையார் கோயிலும் மேற்குமுனையில் மாரீசகூடல் கலப்பிராகிரி முருகன் கோயிலும் கிழக்கு முனையின் இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் கோயிலும் மகோற்சவம் காணும் கோயில்களாக அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பு.

இளவாலை ஆனைவிழுந்தான் ஆலயம் வரலாற்றுக்கு முற்பட்ட பழமைவாய்ந்தது. மாருதப்பிரவீக வல்லியின் யானை விழுந்து வணங்கியதால் ஆனைவிழுந்தான்எனும்தலப் பெயர் ஏற்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதை உண்டு. மூர்த்தி அற்புதமான லிங்கப்பிள்ளையார்.

தல விருட்சம் வேம்புடன் கூடிய அரசு. இது மிகப் பழையது. இத் தலவிருட்சம் ஸ்தம்பமண்டபத்துக்கும் வசந்தமண்டபத்துக்கும் நடுவே தூலலிங்கமான கோபுரம்போல ஆலய வாயிலில் காட்சி தருவது ஒரு புதுமை.

இக் கோயில் இளவாலையின் கிழக்கு முனையில் மிக உயரமான நில அமைப்பில் இராஜதானி போலத் திகழ்கிறது. உதயசூரியன் தன் ஒளிக் கதிர்களை உலகுக்கு வழங்க எழுவது போல ஆனைவிழுந்தான் விநாயகர் ஞானக் கதிர்களை வீசி இளவாலை மக்களுக்குக் கீழ்த் திசையிலிருந்து அருள் பாலிக்கின்றார்.

1976 இல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தின் பின் 1999 வரையான காலப்பகுதியில் அமைதியாக இருந்த பெருமான் மீளக்குடியமர்வுடன் அருட்பிரவாகத்தைத் தந்துகொண்டிருக்கிறார்.

யாரும் எதிர்பாரா வகையில் பிள்ளையார் பீடத்தில் எழுந்தவர் கோலாகலமாக 1999 பிரமாதி ஆனியில் மகா கும்பாபிஷேகம் நடந்தது கோயில் புதுப் பொலிவு பெற்றது. மகாலட்சுமி, நாகதம்பிரான், சந்தானகோபாலர், முருகன் நாச்சிமார், வயிரவர் பரிவாரக் கோயில்கள் எழுந்தன. வசந்த மண்டபம் எழுந்தது. வீதிகள் விரிந்தன. ஸ்தம்பமண்டபம் பொன்மயமானது. மகோற்சவம்கொடியேற்றத்துடன்தொடங்கியது. புத்தம்புதிதாய்ச் சகடை, சப்பரம், பூசை உபகரணங்கள் வந்தன. புதிய சித்திரத் தேர் உருவானது. தேர்முட்டி தெய்வீகக் களையுடன் எழுந்தது.

இன்று ஆனைவிழுந்தான் விநாயகருக்கு முதன்முதலாக நடக்கும் மகோற்சவத்திற்கெனப் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நிகழ்கிறது. ஸ்தபதி செ. பாலச்சந்திரன் அவர்கள் 'தேர் நிர்மாண சிம்மம்' எனும் பட்டமளித்து அவரது கலைஞர்களுடன் கௌரவிக்கப்பட இருக்கிறார்.

16-3-2000 த்தில் வேட்டைத் திருவிழாவும் 17-3-2000 சப்பரமும் 18-3-2000 த்தில் தேர்த்திருவிழாவும் 19-3-2000 பங்குனிப் பூரணையில் தீர்த்தமும் மறுநாள் பூங்காவனமும் நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

பங்குனிப் பூரணையைத் தீர்த்த நாளாகக் கொண்டு பங்குனிச் சதுர்த்தியில் கொடியேறும் இவ்வாலயம் இளவாலையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட எல்லையில் இருந்து அருட்பிரவாகம் ஆரம்பித்திருப்பது ஏனைய பகுதி மக்களும் மீளக்குடியமர்ந்து தம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப நல்ல அறிகுறி என்றே கருதி வழிபடுவோம்.

அமைதியான வாழ்வு மலர, வாழ்வின் பயனாய இறையின்பம் மலர ஞானவிநாயகன் நமக்கருள்வானாக!

**சைவப் புலவர். சு. செல்லத்துரை.**
ஓய்வுபெற்ற அதிபர்

## அன்பாய் வாழ அருளுகவே!

மாறாத் துரக முகங்கொண்ட
மாருத வல்லி யமர்ந்து வரும்
வாரணம் விழுந்து நம்பிட்ட
வரலா றுடைய கணபதியே!

பேறாய் அமர்ந்த ஆனைமுகா
பேசிடும் ஆனைவி ழுந்தான் பேர்
பிறங்கும் தலத்தில் வீற்றிருக்கும்
பிரணவப் பிள்ளை யாரப்பா!

நீறா ரக்கை புனையடியார்
நினைந்து பரவும் திருத்தொண்டர்
நித்திலக் கோயி லமைத்தெடுக்கும்
நிறைந்த தேரில் வீதிவரும்

ஆளுர் [illegible] சடையான் முதல்மகனே!
அப்பா நினது திருவிழியால்
அடியார் இன்ப சுகம்பெருகி
அன்பாய் வாழ அருளுகவே!

சுபம்
**- அருட்கவி. சீ. விநாசித்தம்பி -**

## கீரிமலை நகுலேஸ்வரம் ஆதீனகர்த்தாவின் ஆசி

நகுலேஸ்வரத்தின் மேற்கு எல்லையாகத் திகழும் இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகருக்கு முதன் முறையாக மகோற்சவம் ஆரம்பித்துப் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டமும் நடைபெறுவது எம்பெருமானின் அளப்பரும் கருணையேயாகும். பரம்பொருளின் அழித்தல் தொழிலைக் குறிக்கும் தேர் உற்சவத்துக்கு முன்னோடியாக நிகழும் வெள்ளோட்டம் மக்களின் துன்ப துயரங்கள் எல்லாவற்றையும் அழித்து இன்பமயமான நல்வாழ்வு மலர ஞான முதல்வனான விநாயகப் பெருமானின் அருள் பொலிக!

**சிவஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள்**
நகுலேஸ்வர ஆதீனகர்த்தா,
பிரதமகுரு.

## தேரின் தத்துவம் பிரமாவின் சிவகதி

உலகினிலே சூரிய பகவானது ரதத்தின் பின்னர்தான் ஆலயங்களில் தெய்வங்களுக்கு 'தேர்' என்ற ரதபவனி உண்டானது. எத்தனையோ விதமான தேர்கள் உருவகம் செய்யப்பட்டிருப்பினும் மூலக்கருத்து ஒன்றாகவே அமைகிறது.

பூலோக வாழ்வுச் சக்கரங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் தச வாயுக்கள் உருண்டோடி நிறுத்தும்போது அவை அசைதல் முதலான சகல வினைச் செயற்பாடும் ஒழியும்.

ஜீவன் உந்திக்குண்டலினியிலிருந்து நாசி, இருதயமூடாக எழுந்து கண்டம், வாய், நாசி, கண்கள் வழியாக மேலெழுந்து புருவ மத்தியில் தங்கி உச்சியில் லயப்பட்டு உச்சிக்குடையாகிய பிரமரத்திரத்தில் அணையும் போது சிவகதி அடைகிறது என்பதே தேரின் தத்துவம்.

ஆனைவிழுந்தான் விநாயகப் பெருமான் இந்தப் பயனை எல்லார்க்கும் தருவாராக.

மகாராஜ ஸ்ரீ
**சு. து. ஷண்முகநாதக்குருக்கள்**

## மீண்டும் எழுச்சி பெற்று சிறக்கும் ஆலயம்

இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறுகின்ற இனிய காலம் இதுவாகும். சில ஆண்டுகளாகப் போக்குவரவு சீரின்மையாலும் யுத்தத் தாக்குதலினாலும் இவ்வாலயத்தின் நித்திய நைமித்தியங்கள் தடைப்பட்டு இருந்தன. எனினும் பகதர்களின் அயராத அன்பினாலும் பக்தியினாலும் மீண்டும் எழுச்சி பெற்றிருக்கிறது இவ்வாலயம்.

கோயில்களில் நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெற்றால் தான் வீடு சிறக்கும்; நாடு சிறக்கும்; மக்கள் வாழ்வு மேலோங்கும் என்பது அருளாளர்கள் நம்பிக்கை. இந்தப் புனித கைங்கரியத்தில் இவ்வூர் மக்கள் முன்னின்று பணிபுரிவது பாராட்டத்தக்கது. விநாயகன் அருளினால் தேர் வெள்ளோட்டம் சிறக்கவும் மகோற்சவம் இனிது நிறைவுற வேண்டுமென்றும் வணங்கி வாழ்த்துகிறேன்.

**கலாநிதி செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி, தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(74448)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 06 — 1928

மறைவு: 14 — 02 — 2000

## அமரர் குட்டியர் விநாசித்தம்பி

கள்ளமில்லா வெள்ளை உள்ளம் கொண்டீர்
காலத்தால் அழியாத வாழ்வு தந்தீர்
கணப்பொழுதினில் கதிகலங்கிட வைத்தீர் ஐயா!
காலமெல்லாம் வாழும் உம் நினைவுகள் எம் நெஞ்சில்!

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (15 - 03 - 2000) புதன்கிழமை நடைபெறும் அந்தியேஷ்டிக் கிரியை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— குடும்பத்தினர்.

நாவலடி,
உடுப்பிட்டி.

(74457)

# போதைப் பொருள் தடுப்புப் போட்டி

வலிகாமம் தெற்கு, மார்ச் 15

கல்வி, உயர்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள போதைப் பொருள் தடுப்பு பற்றிய போட்டிகளுக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பிவைக்குமாறும் —

நாடகங்களின் பிரதிகளை இத்திகதிக்கு முன் கல்வி, உயர்கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறும் — வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா, வலிகாமம் வலய பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

கனிஷ்ட பிரிவு (தரம் 6-9) கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி என்பவற்றுக்குத் தலா ஒரு போட்டியாளரும் சிரேஷ்ட பிரிவு (தரம் 10-13) பேச்சுப் போட்டி, சிறுகதைப் போட்டி, சுவரொட்டி, சித்திரப் போட்டி என்பவற்றுக்குத் தலா ஒருபோட்டியாளரும் நாடகப் போட்டிக்கு ஒரு குழுவினரும் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ-152)

# சுழிபுரம் மஞவை சுடலையை அபிவிருத்தி செய்யக் கோரிக்கை

சுழிபுரம் பகுதியில் உள்ள மஞவை சுடலையை மேலும் அபிவிருத்தி செய்யும்படி வலி. மேற்குப் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போது மேற்படி விடயம் தொடர்பாகப்பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்தச் சுடலையில் மடம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டது. இங்கு தண்ணீர் வசதி இல்லை என்றும் —

தண்ணீர் வசதி உட்பட ஏனைய வசதிகள் அனைத்தையும் மேற்கொள்ளுமாறும்—

பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சுழிபுரம் மற்றும் பனிப்புலம் உட்பட ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இச்சுடலையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

(ஐ-99)

# உபநயன அழைப்பு

சி. பாலசுப்பிரமணியக் குருக்கள்
பிரேமராணி தம்பதிகளின்

புதல்வன்

## கிரிராஜசர்மா

அவர்கள் 16- 03- 2000 வியாழக்கிழமை தமது இல்லத்தில் உபநயனத்தை சிறப்பாகக் கொண்டாடுகிறார். அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.


சி. பாலசுப்பிரமணியக் குருக்கள்
பிரேமராணி

அம்மன் கோயில்,
உடுவில்.

(74408)

# நீங்கா நினைவஞ்சலிகள்

## முதலாம் ஆண்டு



### செல்வன் செல்வரத்தினம் இலங்கேஸ்வரன்

(ரஞ்சன்) அவர்கள்

(மாணவன், ஆண்டு 10, யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பழைய மாணவன், புற்றளை மகாவித்தியாலயம், யா/ கரணவாய் மகாவித்தியாலயம்)

திதி: 15-03-2000

எம்மினிய இலங்கேஷே எங்கேநீர் போய்விட்டீர்?
இன்முகத்தைக் காணாது எம்மிதயம் கலங்கிறமே!
அம்புலிபோற் ஜொலிக்குமுந்தன் அழகுமுகம் விழிக்காதே
அனவரதம் இங்குநாம் அழுங்கித் தவிக்கிறமே!

மின்னாமல் முழங்காமல் இடியிடித்த தெனவாக
மேலுலக அழைப்புமக்கு விரைந்தே வரவாச்சோ?
சின்ன வயதுமுதல் எமக்கான உதவிகளைத்
தேடிநித்தம் புரிந்துநின்ற செல்வமே, மறைந்தனையோ!

பூரண நிலவே, பொன்தோற்கும் திருமுகமே,
புன்னகை பூக்குமுந்தன் பொலிவுமுகம் விழிப்பதுண்டோ
சிரமைந்த பண்பினனே, சிவனருளின் உதித்தவனே
திருவருளார் புற்றளை விநாயகர்தாள் சேருதியோ!

வள்ளன்மை யாக வாரி வழங்கிநிற்கும்
மன்னு புகழ்சார் மாண்புநிறை உமதுதந்தை
உள்ளம் துயர்மூழ்கி உம்மிருவர் நினைவாலே
உருகியிங்கு கலங்கவைத்த உறுபழிதான் அறியமிங்கே!

## ஆறாம் ஆண்டு



### செல்வி சரோஜினிதேவி செல்வரத்தினம்

(குஞ்சு) அவர்கள்

(ஆண்டு 10 மாணவி, யா/ புற்றளை மகா வித்தியாலயம்)

அன்னை மடியில் 05 — 09 — 1976

ஆண்டவன் அடியில் 10 — 03 — 1994

ஆறாண்டு அல்ல; ஒருநூறாண் டானாலும்
அகத்திரையில் உம்முருவம் அழியாது அழியாது
நீறாக வெந்துநின் பொன்மேனி மறைந்ததுயர்
நெஞ்சம்விட் டகலாது நித்தநித்தம் கலங்கிறமே!

வளர்பிறை போலாக வடிவழகு நிரம்பிவந்தோய்,
மறலியன்று உமதாவி வவ்வுதற்குப் புகுந்தனனோ!
உளமெல்லாம் கலங்கிறமே, உறுஜென்மம் எதுதனிலும்
உற்றஅன்பு மகளாக உமைத்தழுவ வாராயோ!

பலகலையும் மிகத்தேர்ந்து, பதவிதனில் அமர்வாகிப்
பரிமளிப்பீர் எனவாகப் பலப்பலவாய் நினைந்திருந்தோம்.
உவவாத பொற்கிழிபோல் உபகரித்த உள்ளமெல்லாம்
உறுதுயரில் மூழ்க உமக்கிறுதி வந்ததென்ன!

மணக்கோலத் துமைக்கண்டு மனமெல்லாம் களிக்கு முன்னே
மனநிறைவாய் உமக்கான வரிசையெல்லாம் தருவதன்முன்
பிணக்கோலம் அதுகாட்டிப் பிரிந்ததுயர் மீக்கொளவே
பெரும்பொழுது சிறுபொழுதாய்ப் பெரிதிங்கு கலங்கிறமே!

அன்புடையீர் இன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக அழைக்கின்றோம்.

உங்கள் இருவரதும் ஆத்ம சந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
தம்பி, தங்கைமார்

''தேவி பவனம்''
மந்திகை ஆஸ்பத்திரி முன் வீதி,
புலோலி கிழக்கு.

உரிமையாளர்: V.S.P. குமார் (ஸ்ரீகுமார்)

கல்பனா ஸ்ரோர்ஸ்,
பிரதான வீதி,
அச்சுவேலி.

(சி/11367)

# பீஹார் அரசில் பங்கேற்க காங்கிரஸ் கட்சி தீர்மானம்

புதுடில்லி, மார்ச் 15

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் ராப்ரிதேவி தலைமையிலான புதிய அரசாங்கத்தில் பங்கேற்பது என்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் செயற்குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

ராப்ரிதேவி அரசு சட்டமன்றத்தில் நாளை வியாழக்கிழமை நம்பிக்கை வாக்கெடுப்பை நாட உள்ளது, இதில் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் ராஷ்ட்டிரிய ஜனதா தள் அரசு தப்பிப் பிழைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

ராப்ரிதேவி அரசில் சேருவது என்று கட்சியின் தலைமைப் பீடம் முடிவு செய்துள்ளது. 8 அம்ச பொதுத்திட்டம் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. என்று காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான பிரணாப்முகர்ஜி தெரிவித்தார்.

வெளியில் இருந்து பீஹார் அரசுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு அதிகளவில் இருக்காது. அதே நேரம் ராப்ரிதேவி அரசாங்கம் செய்யும் தவறுகளுக்கு காங்கிரஸ் பொறுப்பேற்க வேண்டி இருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# மூன்று கிராமங்களை இஸ்ரேல் பலஸ்தீனத்திடம் ஒப்படைக்கும்.

## அமைச்சரவை அனுமதி அளித்தால்

ஜெருசலேம், மார்ச் 15

அமைச்சரவை ஒத்துழைப்பு வழங்கியதும் அடுத்த வாரம் ஜெருசலேமுக்கு அருகில் உள்ள சில கிராமங்கள் பலஸ்தீனத்திடம் ஒப்படைக்கப்படும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

எகிப்தில் அண்மையில் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்துக்கும் இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக்குக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது இந்தக் கிராமங்களை பலஸ்தீனத்தின் வசம் ஒப்படைப்பதற்கென இனங்காணப்பட்டது.

[illegible] அல்ராம், அல் சாவியா, அபுடயஸ் ஆகிய கிராமங்கள் பலஸ்தீனத்திடம் ஒப்படைக்கப்படும்.

இந்தப் பகுதிகளும் காஸா நிலப்பரப்பின் 6 சதவீதப் பகுதிகளும் கடந்த ஜனவரி மாதமே பலஸ்தீனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் அது பல தடைகள் காரணமாக நடைபெறவில்லை.

தற்போது இந்தக் கிராமங்களை ஒப்படைக்க இஸ்ரேல் இணங்கி இருப்பதன் மூலம் அது காஸாநிஸ் பகுதியில் பலஸ்தீனத்தின் ஏனைய பகுதிகளையும் ஒப்படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (6-9)

# வன்முறை அற்ற தேர்தலை உறுதிப்படுத்த வேண்டும்

## ஜேம்ஸ் ரூபின் வலியுறுத்து

பிரிஸ்ரீனா, மார்ச் 15

கொசோவோவில் ஐ.நாவின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள தேர்தல்களின் போது வன்முறைகள் ஏற்படாமல் இருப்பதையும் தேர்தல்களில் சிறுபான்மை இனத்தவர்கள் பங்கெடுப்பதையும் உறுதிசெய்ய வேண்டும்.

அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சின் பேச்சாளர் ஜேம்ஸ்ரூபின் இவ்வாறு தெரிவித்துள்ளார். கொசோவோவில் அல்பேனியர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையில் நிலவிவரும் பதற்ற நிலையை தணிப்பதற்காக ஜேம்ஸ் ரூபின் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் மெடலின் ஆல்பிரைற்றின் பிரதிநிதியாக அங்கு சென்றுள்ளார்.

தலைநகர் பிரிஸ்ரீனாவில் அல்பேனியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய போதே ஜேம்ஸ் ரூபின் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தல்களின் போது எவ்வாறு வெற்றி பெறுவது என்பது குறித்தும் அவர் அல்பேனியத் தலைவர்களிடம் விளக்கிக் கூறினார்.

ஜேம்ஸ் ரூபினுடன் ஐரோப்பியப்பாதுகாப்பு ஒத்துழைப்பு நிறுவனத் தலைவர் டென் எவெர்ஸ்ட், அமெரிக்க தேசிய பாதுகாப்புச்சபைத் தலைவர் கிறிஸ்தோபர் கில்ட் ஆகியோரும் கொசோவோவுக்கு விஜயம் செய்துள்ளனர்.

(இ-6-9)

# இஸ்ரேலிய அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை

## கூட்டணிக் கட்சிகளும் ஆதரவளிக்கும்

ஜெருசலேம், மார்ச் 15

இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கின் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனக் கவிஞர் ஒருவரின் கவிதைகளை இஸ்ரேலியப் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளின் பாடவிதானங்களில் சேர்த்துக் கொள்ள அரசு தீர்மானித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டுள்ளது.

பிரதமர் எகுட்பராக்கின் அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக அரசை எச்சரிக்கை செய்துள்ளன.

பலஸ்தீனக் கவிஞர் தான் இஸ்ரேலியச் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த போது எழுதிய கவிதைகளை பாட அலகுகளில் சேர்த்துக் கொள்ளப்போவதாக அண்மையில் இஸ்ரேலிய கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து இஸ்ரேலில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது.

# ஷெரீப்புக்கு ஒரு நாள் அவகாசம்

இஸ்லாமாபாத், மார்ச் 15

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிரான வழக்குகளில் அவரது வழக்கறிஞர்களை மீண்டும் கடமைக்கு அழைக்க கராச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றம் அவருக்கு ஒரு நாள் அவகாசம் வழங்கி உள்ளது.

கடந்த வெள்ளியன்று ஷெரீப்பின் வழக்கறிஞரான இக்பால் ராக் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தான் வழக்கறிஞர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து வருகின்றனர். இதனால் ஷெரீப்பின் வழக்கு விசாரணைக்கு எந்த வழக்கறிஞர்களும் சமுகமளிக்கவில்லை. இதனை அடுத்தே நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கி உள்ளது. (இ-6-9)

# கிளின்ரனின் விஜயத்தை எதிர்த்து இந்தியா முழுவதும் ஆர்ப்பாட்டங்கள்

## மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 15

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் அடுத்த வாரம் இந்தியாவுக்கு மேற்கொள்ள உள்ள விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தப்போவதாக இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் கிளின்ரனின் விஜயத்தைஎதிர்த்து ஆர்ப்பாட்டங்களைநடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்ஜிதன் சுர்ஜித் தெரிவித்தார்.

இந்தியாவின் மிகப் பெரும் கம்யூனிஸ்ட் கட்சியான மார்க்ஸிஸ்ட் கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் நாட்டில் உள்ள ஏனைய இடது சாரிக் கட்சிகளும் அதனுடன் இணைந்து கொள்ளும் என்று அவதானிகள் எச்சரித்துள்ளனர். இதனால் இந்தியாவின் கிராமப்புறங்களில் இருந்தும் கிளின்ரனின் விஜயத்துக்கு எதிர்ப்புக் கிளம்பும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக அமெரிக்க அதிபர் அடுத்த 24 ஆம் திகதி ஆந்திரப் பிரதேசத்துக்கு மேற்கொள்ள உள்ள விஜயத்தை இந்த ஆர்ப்பாட்டங்கள் பெரிதும் பாதிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

கிளின்ரனின் விஜயத்தின்போது தமிழ் நாட்டிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறஉள்ளது தெரிந்ததே. (இ-6-9)

## விஜயம்

பிரிட்டிஷ் மகாராணியார் ஆஸ்திரேலியாவுக்கான தனது விஜயத்தை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் சம்பிரதாயபூர்வ தலைவியாக உள்ள எலிசபெத் மகாராணியார் அங்கு மேற்கொள்ளும் 11 ஆவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும். நாட்டின் தலைவியாக எலிசபெத் மகாராணி தொடர்ந்து இருக்கவேண்டுமா என்பது குறித்து அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் அவர் தொடர்ந்து தலைவியாக இருக்கவேண்டும் என்று 55 சத வீதமான மக்கள் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அதிபர் சுஹாட்டோவின் மருத்துவ அறிக்கை கிடைத்ததும் விசாரணைகள் ஆரம்பமாகும்

## அப்துல் ரஹ்மான் வாஹிட் தெரிவிப்பு

ஜகார்த்தா, மார்ச் 15

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுஹாட்டோ மீதுசுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணைகளை ஆரம்பிப்பதற்காக அவரது உடல் நிலை பற்றிய மருத்துவ அறிக்கையை எதிர்பார்த்து சட்டவாதிகள் காத்திருக்கின்றனர்.

நாட்டின் தற்போதைய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட் இவ்வாறு தெரிவித்தார். தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைக் கூறினார்.

சுஹாட்டோ மீதான விசாரணைகளை ஆரம்பிப்பதா இல்லையா என்பதை அவரது மருத்துவ அறிக்கையே தீர்மானிக்கும். அவரது உடல் நிலை குறித்த மருத்துவ அறிக்கை விரைவிலேயே வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக சுஹாட்டோ அரச மருத்துவமனையில் 45 நிமிடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் வாஹிட் மேலும் கூறினார்.

சுஹாட்டோ மீதும் அவரது பிள்ளைகள் மீதும் நாட்டின் பெருமளவு சொத்துக்களை சூறையாடியதாகவும் அளவுக்கதிகமான சொத்துக்களைசேர்த்ததாகவும் ஊழல் குற்றச் சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மீதான விசாரணைகளுக்கு சமுகமளிக்க 78 வயதான சுஹாட்டோவின் உடல் நிலை இடமளிக்கவில்லை என்று அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ-6-9)

# கார்கில் பகுதியில் பாகிஸ்தான் மீண்டும் படைகளைக் குவிக்கிறது

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ் குற்றச்சாட்டு

புதுடில்லி, மார்ச் 15

இந்தியாவின் கார்கிலில் கடந்த ஆண்டு சண்டைஇடம் பெற்ற பகுதியில் பாகிஸ்தான் மீண்டும் படைகளைக் குவித்து வருகின்றது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறி உள்ளார்.

பாகிஸ்தானின் நடவடிக்கைகள் அனைத்தையும் இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் அசட்டுத் துணிச்சலுடன் செயற்பட்டால் தகுந்த பதிலடி தரப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கடந்த வருடம் கார்கில் பகுதியில் ஊடுருவிச் சில பகுதிகளைப் பாகிஸ்தான் இராணுவமும் அதன் கூலிப்படையினரும் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். 'விஜய் சக்காரா' என்ற இராணுவ நடவடிக்கை மூலம் இந்தியப் படையினர் ஊடுருவல்காரர்களை அங்கிருந்து விரட்டி அடித்தனர்.

அதன் பின்னர் பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் ஆட்சியைக் கைப்பற்றியதும் கார்கிலில் போர் நடைபெற்ற எல்லைப் பகுதியில் இருந்து படைக்குறைப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# செச்சின் தீவிரவாதத் தலைவர் ரஷ்யப் படையினரால் கைது

செச்சினியத் தீவிரவாதத் தலைவர்களில் ஒருவரான சால்மன் ராஜியான் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ரஷ்யப் பதில் அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட தீவிரவாதத் தலைவர் விசாரணைகளுக்காகமொஸ்கோவுக்குஅழைத்து வரப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டுள்ளதனால் செச்சினியாவில் தீவிரவாத நடவடிக்கைகள் முடிவடைந்து விடும் என்று கருத முடியாது. ஏனெனில் இன்னும் பல முக்கிய தலைவர்களும் நூற்றுக் கணக்கான தீவிரவாதிகளும் தொடர்ந்து செச்சினியாவில் மறைந்து வாழ்கின்றனர் என்று அங்கு நிலை கொண்டுள்ள ரஷ்யப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# செய்திக் கொத்து

## சிரமதானம்

வேலணை, மார்ச் 15

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் செந்தமிழ் இளைஞர் கழக அங்கத்தவர்களால் அப்பகுதியிலுள்ள ஆலய வீதிகள் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

சென்ற வாரம் நடைபெற்ற இந்தச் சிரமதானத்தின் போது பெருங்காடு சிவன் கோயில் மற்றும் புற்று வைரவர் கோயில் ஆகிய ஆலயங்களின் வீதிகள் துப்புரவு செய்யப்பட்டன.

(க-167)

## மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கல்

வேலணை, மார்ச் 15

வேலணை பிரதேச சபையினால் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கென மரமுந்திரிகைக் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

(க-167)

## அ. அட்டை வழங்க நடவடிக்கை

நெடுந்தீவு, மார்ச் 15

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மக்களுக்கு கடற்படையினர் அடையாள அட்டைகளைவிநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கென விநியோகிக்கப்படும் படிவத்தில் பத்து வயதுக்கு மேற்பட்டோர் தமது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் எனவும் மெலிஞ்சி முனைப் பகுதியில் உள்ளவர்களுக்கு தற்சமயம் இந்தப் படிவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் படிவங்களைப் பெறாதவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டு விரைவில் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறும் கிராம அலுவலர் எஸ். கணபதிப்பிள்ளை கேட்டுள்ளார்.

(க-111)

## தீர்த்த மண்டபம் அமைப்பு

வலிகாமம்தெற்கு, மார்ச்15

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் இப்பகுதி மக்களின் உதவியுடன் சுமார் நான்கு லட்சம் ரூபாசெலவில் புதியதீர்த்த மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள வருடாந்த தீர்த்தோற்சவ நிகழ்வு இப்புதிய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க-152)

## சிறுகதைகளின் தொகுப்பு

திருநெல்வேலி, மார்ச் 15

யாழ் இலக்கிய வட்டம் ''சுதந்திரன்'' வாரப் பத்திரிகையில் வெளிவந்த 108 சிறுகதைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிடுவது என்று தீர்மானித்துள்ளது.

செங்கைஆழியான் தலைமையில் நடைபெற்றஇலக்கிய வட்டக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(க - 135)

## மகளிர் தின விழா

நவாலி, மார்ச் 15

சர்வதேச மகளிர் தினத்தையொட்டிபண்டத்தரிப்பு மாதர் அபிவிருத்தி நிறுவனம் மகளிர் தின விழாவை பண்டத்தரிப்பு தையல் பயிற்சி நிலையத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடத்தியது.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் துரையப்பா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். செல்வராசாவும் சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி சண்முகநாதன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக செயல்திட்ட உத்தியோகத்தர் திருமதி ராணி ரட்ணதேவி ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (க-100)

## சிறுதானியப் பயிர்ச் செய்கை

சண்டிலிப்பாய் மார்ச் 15

பண்டத்தரிப்பு, மாதகல், வடலியடைப்பு ஆகிய பகுதிகளில் நெல் அறுவடை செய்யப்பட்ட வயற்காணிகளில் எள், பயறு, சணல் ஆகிய சிறு தானியப்பயிர்ச் செய்கையினை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(க - 135)

## வீதி திருத்த நடவடிக்கை

நெடுந்தீவு, மார்ச் 15

வேலணை அராலிச் சந்தியில் இருந்து அராலித்துறை வரையான வீதியைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீதித் திருத்த வேலைகளுக்கென அடிகல்லிக் கற்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. (க-111)

## இராஜகோபுரம் அமைக்கப்படும்

வேலணை, மார்ச் 15

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு மிகவிரைவில் புதிய இராஜகோபுரம் அமைக்கப்படவுள்ளது.

சுமார் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக் கோபுரப் பணிகளுக்கென திருப்பணிச் சபை ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. (க-167)

## திருட்டு

நெல்லியடி, மார்ச் 15

அதிகாலை வேளை வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கு விறாந்தையில் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் இருந்து மூன்றரைப் பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்துக் கொண்டு தலைமறைவாகினர்.

இந்த சம்பவம், நேற்று அதிகாலை 2.30 மணியளவில், புலோலி கிழக்கு ஊரியவத்தை என்ற இடத்தில் யோண்சன்- மேரிமலர் (வயது 32) என்பவர் வீட்டில் இடம் பெற்றது.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது.

(க-109)

# எழுவைதீவுப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீடிப்பு!

## மாணவர்கள் பலர் வெளியேறுகின்றனர்

நெடுந்தீவு, மார்ச் 15

எழுவை தீவுப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீடிக்கிறது. இதன் காரணமாக மாணவர்கள் பலர் அங்கிருந்து வெளியேறி ஊர்காவற்றுறையில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இதுவரை 53 மாணவர்கள் வரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, கரம் பொன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம், இளவாலை கொன்வென்ட் ஆகிய பாடசாலைகளில் சேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள பாடசாலைகளில் உரிய பாடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் இல்லை எனவும் —

ஆசிரியர்கள் இத்தீவில் தங்கியிருந்து தமது கடமையைச் செய்யக் கூடியதாக அவர்களுக்கு இருப்பிட வசதிகள் இல்லை எனவும் —

இங்குள்ள ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேசத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கப் படுவதில்லை எனவும் —

இதனால் மாணவர்கள் தமது கல்வியைச் சீராகப் பெற முடியாதிருப்பதாகவும் — பங்குத் தந்தை அருட்திரு யேசுதாசன் கூறினார்.

## குருபூசை

கொழும்புத்துறை யோகர் சுவாமியின் வருடாந்தக்குருபூசை தினம் சுவாமி சமாதிக் கோயிலில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை, கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் என்பன இடம் பெறவுள்ளன.

நண்பகல் அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம் பெறும். (க-30)

## பயண அனுமதி பெற்றவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 14 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு!

**சாவகச்சேரி**

(136118ஏ), (136121ஏ).

**கோப்பாய்**

(134198ஏ), (135996ஏ), (135996பி), (135696சி), (136125ஏ), (136192ஏ), (136225ஏ), (136225பி), (136471ஏ), (136473ஏ), (136473பி), (136502ஏ), (136504ஏ), (136504பி), (136504சி), (136504டி), (136504ஈ), (136773ஏ), (136779ஏ), (136779பி), (136787ஏ), (136788ஏ), (136788பி), (138252 பி), (139432ஏ), (139432 பி), (139438ஏ), (139438பி), (139441 ஏ) (139442 ஏ), (139446 ஏ), (139446 பி), (139470 ஏ).

**நல்லூர்**

(125347 ஏ), (128352 ஏ), (128352 பி), (128352 சி), (128352 டி), (136064 ஏ), (136065 ஏ), (136071 ஏ), (136073 ஏ), (136095 ஏ), (136126 ஏ), (136184 ஏ), (136789 ஏ), (136789 பி), (138252 ஏ), (139440 ஏ), (139440 பி), (139451 ஏ), (139451 பி), (139461 ஏ), (139461 பி), (139461 சி), (13986 ஏ). (க)

## சமய சந்நிதிகளில்

சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில் தற்போது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சுக்கிர வார உற்சவம் இடம்பெற்று வருகின்றது.

விசேட அபிஷேக ஆராதனைகள், வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று சுவாமி உள்வீதிவலம் வரும் நிகழ்வும் அதனை தொடர்ந்து பிற்பகல் 5.30 மணிக்கு சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெற்று வருகின்றன.

(க-152)

★ ★ ★

இணுவில் சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

திருவிழாக்காலங்களில் தினமும் மாலை ஐந்து மணியில் இருந்து ஆறு மணி வரை ஆசிரியர் ஆறு திருமுருகனின் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று உற்சவம் பூர்த்தியடையும். (க-152)

★ ★ ★

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று புதனகிழமை காலை 10.30 மணி தொடக்கம் பிராயச்சித்த அபிஷேகம், பூசை என்பன பிரதம குரு '' ஆகமகிரியாமணி'' பிரம்மஸ்ரீ க. மு. ஜெகநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன.

இப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து கடந்த மூன்று மாதங்களாக இவ் ஆலயத்தில் பூசைகள் நடைபெறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று புதன் காலை தொடக்கம் பூசை ஆரம்பமாகி வழமைபோல் இடம் பெறும். (க-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 15

கொழும்புத்துறை கிழக்கு அருள் மிகு ஸ்ரீ முத்து மாரி அம்மன் திருக்கோயிலில் இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் அபிஷேகம், பூசை ஆலயப் பிரதம குருசிவ ஸ்ரீ தி. சங்கரராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இப்பகுதி மக்களின் இடம் பெயர்வை அடுத்து கடந்த மூன்று மாதங்களாக இந்த ஆலயத்தில் தொடர்ந்து பூசை இடம் பெறாதிருந்தது. மேற்படி அபிஷேகத்தைத் தொடர்ந்து வழமைபோல் பூசைகள் இடம்பெறவுள்ளன. (க-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 15

யாழ் கட்டுடை அரசடி அருள் மிகு ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்தசனி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உற்சவ முடிவு தினமான இன்று புதன்கிழமை காலை விஷேட அபிஷேகம், பூசை, வழிபாடுகள் என்பன நடைபெறவுள்ளன. (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஆனைக்கோட்டை அருள் மிகு புளியங்கண்டு பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன் கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

((க-139)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 07 — 08 — 1932

மறைவு 14 — 02 — 2000

## அமரர் சின்னத்தம்பி சின்னக்குட்டி

14-02-2000 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் ஆன்மா இறைவன் திருவடியில் சாந்தியடைய வேண்டுமென அஞ்சலி செய்து பிரார்த்திக்கும் இவ்வேளையில் அவரது இறுதிக்கிரியையில் நேரில் கலந்தும் அஞ்சலிச் செய்திகள் அனுப்பியும் ஆறுதல் தந்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்று (15-03-2000) புதன் அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கல்லூரி வீதி,
இளவாலை.

(சி/11420)

# உதயன்

## நோயாளர் அம்புலன்ஸ் சேவை

அவசர சிகிச்சை அளிக்கப் பட வேண்டிய தீவுப் பகுதி யைச் சேர்ந்த நோயாளர்களை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத் திரிக்கு — யாழ். போதனா வைத்தியசாலைக்கு — கொண்டு வருவதற்கு "அம் புலன்ஸ்" படகுச் சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக் கப் பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை இதற்கு முன்னரும் — கடந்த மூன்று வருடங்களாக — முன்வைக்கப் பட்டபோதிலும், நிதி கிடைத்த தும் இந்த வசதி செய்யப்படும் என்று உறுதி அளிக்கப்பட்ட போதிலும், இன்னும் நிறை வேற்றப்படவில்லை.

அண்மையில் யாழ். செய லகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில், தீவுப் பகுதியின் மூத்த சிவில் நிர்வாக அதிகாரிக ளான பிரதேச செயலாளர்கள் இதனைச் சுட்டிக் காட்டினார் கள்; கவலை தெரிவித்தார் கள். காலதாமதமின்றி "அம் புலன்ஸ்" படகுச்சேவை ஆரம் பிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

தீவுப்பகுதி மக்களின் பிர தான பயணத் தேவை கடற் போக்குவரத்தாகும். அது இன்னமும் மக்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் நடைபெறவில்லை என்று அவ் வப்போது அவர்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படு வதை அவதானிக்கலாம்.

நோயாளர்களுக்கான "அம் புலன்ஸ்" படகுச் சேவை ஒன்றை நடத்துவது மிகவும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த விஷயத்தை செய்வதனை இது வரை காலந்தாழ்த்தியதே விரும்பத்தக்கதல்ல.

அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோயாளர்கள் உரிய நேரத்தில் — விரைந்து — ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட வேண்டியவர்கள். இதற் குத் தரைவழி "அம்புலன்ஸ்" சேவை குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் அத்தியாவசி யம். ஆனால் அந்தச் சேவை மாவட்டத்தின் கிராம வைத்திய சாலைகளில் போதிய அளவில் இப்போது நடைபெறுவதில்லை. அனேகமாக நோயாளர்களின் உறவினர்கள் தாமே வாகன வசதிகளைச் செய்து — பணத் தைச் செலவிட்டு — அவசர அவசரமாக பெரியாஸ்பத் திரிக்குக் கொண்டுவந்து சேர்க் கிறார்கள்.

தீவுப் பகுதியிலும் தரைவழி "அம்புலன்ஸ்" சேவை எது வும் இல்லை. அங்கும் பொது மக்களே சொந்தச் செல வில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அவசர நோயாளர் களை யாழ்ப்பாணம் பெரியாஸ் பத்திரிக்குக் கொண்டு வருகி றார்கள்.

ஆனால் கடல்வழிப் போக்கு வரத்து அவ்வாறு செய்யக் கூடியதல்ல. கடற் பயணத்தில் எப்போதும் அவதானம் தேவை. அவசர நோயாளர்களைக் கொண்டு வரும் போது மேல திக அவதானமும் எச்சரிக்கை யும் வேண்டும்.

"அம்புலன்ஸ்" படகுச் சேவையின் அவசியம் இங்கே தான் முக்கியத்துவம் பெறு கின்றது. பல நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு இச் சேவை மிகவும் இன்றி யமையாததாகிறது. எனவே இச் சேவையை ஆரம்பிப்பதற் கான நடவடிக்கைகளை தாம தம் இன்றி முன்னுரிமை கொடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

## உதவிப் பணக் கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதத்துக்குரிய கொடுப்பனவு களுக்கான வவுச்சர்கள் சம்பந் தப்பட்ட தபாலகங்களுக்கு வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொதுசன மாதாந்த உத விப் பணம் பெறுபவர்கள் உட னடியாக தத்தமது தபாலகங் களுக்குச்சென்றுஉரிய கொடுப் பனவைப்பெற்றுக்கொள்ளுமாறு வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## தபால் மூலம் வீடியோ நாடாக்கள்

யாழ். பிரதம தபாலகத் தில் வீடியோ நாடாக்களைத் தபால் மூலம் அனுப்பும் நட வடிக்கைகள் மீண்டும் ஆரம் பிக்கப்பட்டதைத்தொடர்ந்து கடந்த இரண்டு நாள்களாகப் பொதுமக்கள் அதிகமாக வந்து அவற்றை அனுப்புவதாகத் தபாலக வட்டாரங்கள் தெரி வித்தன.

காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரையும் வீடியோ நாடாக்கள் ஏற்றுக்கொள் ளப்படுகின்ற போதிலும் ஒரு நாளில் குறிப்பிட்ட எண் ணிக்கையான நாடாக்களே ஏற்றுக் கொள்ளப்படுவதா கத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

இளவாலை ஆனைவிழுந் தான் ஸ்ரீ விநாயகர் ஆலயத் தின் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட சித்திரத்தேரின் வெள் ளோட்ட விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த ஆலயத்தில் முதல் முறையாக உற்சவம் ஆரம்ப மாகிப் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதியம் கிடைக்கவில்லை

யாழ் மாவட்ட உள்ளூ ராட்சி ஓய்வூதியர்களின் பெப் ரவரி மாத ஓய்வூதிய வவுச் சர்கள் கிடைத்து ஒரு வாரமா கியும் அதற்குரிய கொடுப் பனவை காசோலைகளும் பட் டியல்களும் இன்னமும் வங்கி களுக்கு வந்து சேராததால் ஓய்வூதியத்தைப் பெற முடிய வில்லை என ஒரு வாரமாக வங்கிக்கு ஓய்வூதியத்துக்கு அலையும் ஓய்வூதியர்கள் கவ லையுடன் தெரிவித்தனர்.

பெப்ரவரி மாத வவுச்சர் கள் மார்ச் முதல் வாரத்தில் ஓய்வூதியர்களுக்குக் கிடைத் தமை குறிப்பிடத்தக்கது

(க-[17)

# கல்வி நிர்வாகத்துக்கு முக்கியத்துவம்

# அதனால்கற்றல்கற்பித்தல்பின்னடைவு

## மேலதிக கல்விப் பணிப்பாளர் கவலை

திருநெல்வேலி, மார்ச் 15

யாழ். குடாநாட்டில் தற் பொழுது வலயம். கோட்டம் என்று பல கல்வி நிர்வாக அமைப்புக்கள் உள்ளன. இவற் றில் தகுதி வாய்ந்த — தரா தரம் மிக்க — ஆசிரியர்கள் பலர் கடமை ஆற்றுகின்ற னர். இதனால் பாடசாலை களில் கற்றல், கற்பித்தல் பின்னடைந்து வருகிறது.

இவ்வாறு மேலதிக மாகா ணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளை கூறினார்.

திருநெல்வேலி சைவ வித் தியா விருத்திச் சங்கத்தின் பவள விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு கடந்த ஞாயிற் றுக்கிழமை நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு "கல்வி நிறுவனச் செயற்பாடு கள்" என்ற தலைப்பில் இவர் உரை நிகழ்த்தினார்.

சங்கத் தலைவரும், யாழ். பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதியுமான பேராசிரியர் அ. சண்முக தாஸ் தலைமையில் விழா நடைபெற்றது.

கலாநிதி தணிகாசலம் பிள்ளை தொடர்ந்து உரை யாற்றுகையில் குறிப்பிட்ட தாவது:

தற்போது கற்றல், கற்பித் தல் ஆகியவற்றுக்கு முக்கியத் துவம் கொடுப்பதற்குப் பதி லாக கல்வி நிர்வாக அமைப்பு களுக்கே முக்கியத்துவம் வழங் கப்பட்டு வருகின்றது. முன் னர் யாழ். மாவட்டத்துக்கு ஒரு வித்தியாதிபதியே நிர் வாகம் செய்து வந்தார். பின் னர் பல கல்வி நிர்வாக நிறு வனங்கள் ஏற்படுத்தப்பட் டன. வலயம், கோட்டம் என்று பல நிர்வாக அமைப் புக்களில் தகுதி வாய்ந்த— தராதரம் மிக்க — ஆசிரியர் கள் பலர் நிர்வாகக் கடமை களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள னர். இதனால் பாடசாலை களில் கற்றல், கற்பித்தலுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

முன்னர் பாடசாலைகள், கல்லூரிகள் இரு நேரப் பாட சாலைகளாகச் செயற்பட்டு வந்த போது மாணவர்கள் கல்வி, கலை மற்றும் விளை யாட்டுத்துறைகளில் அதிகளவு ஈடுபாடு காட்டத் தூண்டு தலாக இருந்தது. தற்போது ஒரு நேரப்பாடசாலைகளாகி விட்டதால் மற்றொரு நிறு வனமான தனியார் கல்வி நிறு வனங்களுக்கும் (ரியூட்டரி களுக்கும்) மாணவர்கள் மேலதிக கல்விக்காக செல் லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு கிராம மட்டத்தில் இயங்கும் சிறிய பாடசாலை களுக்கு உதவிகள் வழங்கப் படாது பெரிய கல்லூரிகளுக்கு அதிகளவு உதவிகள் வழங்கப் படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. மாணவர்கள் அமை தியாக இருந்து விடுதியில் இருந்து — கற்ற காலத் தில் கல்வியின் பயனை அவர் கள் நன்கு அனுபவித்துக் கற் றவர்களாக விளங்கினார்கள். ஆசிரியர்களுக்கு பயிற்சி முக் கியமானது. கல்வித்தரா தரம் இருந்துவிட்டால் மட் டும் கற்பிக்க முடியாது. இத னால் தான் சைவ ஆசிரியர் பயிற்சி கலாசாலை அக்காலத் தில் உருவானது — என்றார்.

### பேராயர் உரை

தென்னிந்தியத் திருச்சபை யின் யாழ். அத்தியட்சாதின பேராயர் அருட்கலாநிதி எஸ். ஜெபநேசன் "யாழ்ப்பாணத் தில் பிறமொழிக் கல்வியின் தாக்கம்" என்ற தலையங்கத் தில் உரையாற்றுகையில் குறிப் பிட்டதாவது:-

கடந்த 20 ஆம் நூற்றாண் டில் மக்கள் மத்தியில் ஆங் கில மொழி அறிவும், ஆங்கில நாகரிகமும் அதிக வளர்ச்சி கண்டன. ஆங்கில மொழியை கற்றால் தான் அதிக வேலை வாய்ப்புகளைப் பெறலாம் என்ற நிலை இருந்ததினால் பலர் அதனை கற்றுத் தேர்ச்சி பெற்றார்கள்.

அமெரிக்க மிஷனரிமாரும் அங்கிலிக்கன் திருச்சபையின ரும் யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பாட சாலைகளை நிறுவி கல்வி நட வடிக்கைகளில் ஈடுபட்டு வந் தனர்.

இந்தச் சூழ்நிலையில் அன்று தமிழ் ஆசிரியர்கள் ஓரங்கட் டப்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சியின் போது மிகவும் குறைந்த சம்பளம் பெறுபவர் களாகத் தமிழ் ஆசிரியர்கள் இருந்தனர்.

இதவேளை ஒல்லாந்து பைபிளில் இலங்கையில் அதிக மாகப் பெரும் பான்மையின ரால் பேசப்படும் மொழி தமிழ் மொழி என்று குறிப் பிடப்பட்டுள்ளது. தமிழ் மொழியைக் கற்று அதன் மூலம் மதத்தைமக்களிடையே பரப்புவதற்கு மிஷனரிமார் கள் முன் வந்தனர். அவர் களின் பாடசாலைகளில் தமிழ் அறிவுக்காக "கந்த புராணம்" நூலும் படிப்பிக் கப்பட்டு வந்துள்ளது என்று அறிய முடிகின்றது.

இன்று எமது பிரதேசத்தி லிருந்து வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றவர் கள்-செல்லுபவர்களில்—பலர் தமது வீட்டு நூலகங்களில் சேகரித்து வைத்த அரியநூல் களைக்கைவிட்டுப் போகின்ற னர். மிகவும் பெறுமதி வாய்ந்த வரலாற்றுத் தொடர்பான இந்த நூல் களில் பல முக்கிய விடயங் கள் அடங்கியுள்ளன. இவை எமது எல்லைக் கதியால்க ளைப்போன்றவை. இவற்றை அழியவிட்டால் எமது இனத் திற்குள திர்காலத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றார்.

ஜப்பான் நாட்டு கக்கயின் பல்கலைக்கழக வருகை ஆய் வாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் 'சைவவித்தியா விருத்திச்சங்கமும் எதிர்காலக் கல்வியும்' என்ற தலையங் கத்தில் உரையாற்றுகையில், இந்து 'போர்ட்' பாடசாலை கள் இன்று அரசாங்கப் பாட சாலைகளாகிவிட்டன. அவற் றில் ஒரு பாடசாலையான முத்துத்தம்பி மகாவித்தியால யம் மட்டும் தனித்துவமான ஒரு பாடசாலையாக விளங்கு கின்றது. இங்கு, சைவச் சிறு வர் இல்லப் பிள்ளைகள் 200 பேர் கல்வி பயின்று வருகின் றார்கள். இவர்களின் உள் ளத்தை, உற்சாகப்படுத்தி இவர்கள் தமது கல்வியிலேயே மனம் செலுத்தவும் நல்ல எதிர் கால பிரஜைகளாக உரு வாகவும் சைவ வித்தியாவிருத் திச் சங்கம் பாடுபட்டு வருகின் றது.

இவர்களின் நல்வாழ்வுக்கு இயலுமான நிதியினை வழங்கி உதவுமாறு வேண்டு கின்றோம். இந்தப் பிஞ்சுக் குரல்களின் துயரத்தின்சாயல் படியவிடாது காப்பது சமு தாயத்தின் கடன்—என்றார்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வ. ஆறுமுகம், வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி சோகேசசுந்தரி கிருஷ்ண குமார் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

"வள்ளி திருமணம்" என்ற யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழக இசை நாடக மும் இறுதியில் இடம்பெற் றது.

(இ-135)

## நாளை

பங்குனி 3

வியாழக்கிழமை

திதி: ஏகாதசி

பிற்பகல் 4.38 வரை.

நட்சத்திரம்: பூசம்

முன்னிரவு 7.19 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 7.51—9.21

ராகுகாலம்: 1.51—3.21

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

முள் நிறைந்த செடி யிலே தான் முழு அழகு வாய்ந்த ரோஜா மலர் பூக் கிறது. அது போலவே சொல் லொணாத் துன்பங்களிடை யிலே தான் உண்மை ஆத்து மலர்கிறது.

- காந்தியடிகள்

## சதாபிஷேகப் பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 15

இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகரின் சதாபி ஷேகப் பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அன்றைய தினம் காலை 7 மணி முதல் 9 மணி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சதாபிஷேக சாந்தி நடைபெற்று விழா நாயகனும் பாரியாரும் நல் லூர் துர்க்காதேவி மணி மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவர்.

தொடர்ந்து யாழ். பல் கலைக்கழகத் துணைவேந் தர் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை தலைமையில் அங்கு நூல் வெளியீடும் கௌரவிப்பும் இடம்பெற வுள்ளன.

## தவக்காலச் சிந்தனை

(எட்டாம் நாள்)

தவக்காலப் பாதையில் முதல் வாரத்தில் நிற்கும் நமக்கு இறைவன் அருளும் செய்தி என்ன?

திமிங்கிலத்தின் வயிற்றிலி ருந்து வெளியே வந்த யோனாஸ் நினிவே மக்களை மனமாற்றம் பெற அழைக் கின்றார். அம் மக்களும் அழைப்பின் குரலை அறிந்து, தெளிந்து பழைய பாவ நிலையைக் களைய முன்வரு கின்றனர்.

"குற்றமற்ற 99 நீதிமான் களை விட மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து வானத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும்" என்ற கிறிஸ்து வின் அழைப்பு நிறைந்த செய்தியிலிருந்து மனமாற்றம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவசியமானதென்பது தெளி வாகின்றது.

எனவே இருளின் பாதை யில் இருந்து ஒளிக்குச் செல் வோம் எதிர்பார்ப்புநிறைந்த கிறிஸ்துவின் அழைப்பை செயற்படுத்த முனைவோம். மனமாற்றம் பெற்றுப் புதுப் பிறப்படைவோம் "பாவத்தை வெறுத்து பாவியை அணைக்கும்யேசுவைஎம் உள் ளங்களில் வழிபட எம்மைத் தகுதியுள்ளவராக்குவோம்"

கு. தவம்

மானிப்பாய்

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### அபயமும், வரதமும்

மலைபோலவே ஆபத்து வரும்போ தெல்லாம்
'மானிடனே! அஞ்சேல்! நான் காப்பேனுனினை
நிலை குலையேல்' என அபயம் காட்டும் உன்கை
நிர்மலமாய் உன்னாமம் நினைப்பார்க் கெல்லாம்
நிலையான வரந்தருவா யென்றே காட்டும்
நின் மறுகை; இங்கே நாம் பட்ட தெல்லாம்
அலையலையாய்த் துயரமே, அபயம் இல்லை;
அருள் வரமும் இலை; கையை மாற்றிக்கொள்ளோ

அராலி பரமேஸ்வர சர்மா

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

திருமதி அ. கதிர்காமத்தம்பி என்பவருடைய தேசிய அ. அ. விசேட அ. அ. மற்றும் பணப்பை என்பன 10-03-2000 அன்று நெல்லியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளரிடம் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (74477)

இராசலிங்கம் நாகேஸ்வரி தேசிய அடையாள அட்டை [708193402 V] நிமலன் நாகேஸ்வரி விசேட அடையாள அட்டை (0903031781) இரண்டும் 13 - 03 - 2000 அன்று யாழ். மின்சார நிலைய வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விஜய் சில்க்ஸ், 123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். [74475]

## விற்பனைக்கு

ஓட்டோ — 205 — 9210 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. பாக்கியநாதன் மட்டுவில் தெற்கு, அமெரிக்கன் மிஷன் பாடசாலை றோட், சாவகச்சேரி. (74443)

நன்கு பராமரிக்கப்பட்ட 9மாதம் நிரம்பிய சேவர் இன முட்டை இடும் பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு-: சி. ஜெயந்தன் சுதுமலை வடக்கு, மானிப்பாய். (இலங்கை வங்கி முன் ஒழுங்கை). (74471)

மிக உன்னத நிலையிலுள்ள Ford Prefect"105E" (Overhead Valve) 4 Sri Honda Dax St 50 Motor Cycle உடன் விற்பனைக்குண்டு. 20, சங்கத்தானை ஒழுங்கை, டச்வீதி ஊடாகச் சாவகச்சேரி. [74469]

## நாடகம்

வானொலி நாடகப் போட்டிக்கு நாடகம் எழுதுகிறீர்களா? 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நாடகங்களை வாசியுங்கள். 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? 2. நாடகம் எழுவது எப்படி? நாடகம் எழுதுவதை விளக்கும் நூல்கள் ரூபா 50. (74470)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler, Cullbirds சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (74453)

## தடுப்பு முகாம்

பளைப் பிரதேசத்தில் அதிகரித்துவரும் மலேரியாக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பகுதியினர் கிராமங்கள் தோறும் மலேரியா தடுப்பு முகாம்களை நடத்தி வருகின்றனர்.

இவர்கள் மலேரியாவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சையினை வழங்குவதுடன் வைத்திய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

முகமாலை கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான மலேரியாத் தடுப்பு முகாம் இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என பளைப்பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் க. கர்ணன் தெரிவித்துள்ளார். (க-117)

---

யாழ்'தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்:— 18 - 03 - 2000 சனிக்கிழமை பி. ப. 3. 30 மணி

இடம்:— பாடசாலை மண்டபம்.

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. தேவராஜா,
பழைய மாணவர் சங்கச் செயலாளர்.

(சி/11403)

---

மானிப்பாய்

## மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ காலங்களில் தற்காலிக கடைகள் அமைத்தல்

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 28 -03 - 2000 தொடக்கம் 14-04-2000 வரை நடைபெறவுள்ளது. இவ் உற்சவகாலங்களில் ஆலயச் சூழலில் தற்காலிகக் கடைகள் அமைக்க விரும்புவோர் 19 - 03 - 2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சமுகம் தரவும்.

குறிப்பு:

தற்காலிக கடைகள் அமைக்க விரும்புவோர் கடைக்கான முழுப்பணத்தினையும் செலுத்தி தங்கள் கடைகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தலைவர்,
மருதடி விநாயகர் ஆலய
தர்மகர்த்தா சபை.

மானிப்பாய். (74480)

---

## பதவி வெற்றிடம்

### தொலைக்காட்சி வானொலி திருத்தல் பயிற்சிப் போதனாசிரியர்

மேற்படி போதனாசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமையுள்ளவர்கள் விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் எம்முடன் நேரடியாக உடன் தொடர்பு கொள்ளவும்.

தகைமை:- Electronic Engineering Part II
or
Diploma in TV & Radio Repairs

SECRETARY
TRKO,
106, 4th CROSS STREET,
JAFFNA.
Tel. No. 2416 (சி11406)

---

## யாழ். வைத்தியசாலை

## கண் மாற்று சத்திரசிகிச்சை

கண்மாற்று சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். கண்மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ள விருப்பவர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுகளின் பிரகாரம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் திகதி நிர்ணயம் செய்யப்படும்.

★ கண்ணைத் தானமாக அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.
★ 'கட்ரக்ட்' (CATARACT) சத்திரசிகிச்சை பிரதி வியாழன் தோறும் உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகின்றது.
★ சகல நோய்களுக்கான சத்திரசிகிச்சைகளும் நடைபெறுகின்றன.
★ ஏற்புத்தடை மருந்து (A.T.S) ஏற்றப்படுகின்றது.

284, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்.

(சி/11405)

---

# திருட்டுக்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர் மீண்டும் சிக்கினார்!

யாழ்ப்பாணம், மார்ச் 15

முப்பது வருட காலமாகத் திருட்டில் ஈடுபட்டு நீதிமன்றத் தண்டனை பெற்ற ஒருவர் மீண்டும் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது 14 ஆவது வயதில் 1967 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி பணம் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு இவரிடமிருந்து நீதிமன்றத்தினால் 250 தண்டப் பணம் அறவிடப்பட்டதுடன் இவர் இரண்டு வருட சீரப்பிணையில் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்து 1969, 1972, 1976 எனபல வருடங்களாகத் திருட்டில் ஈடுபட்டு வந்த இவர் அவ்வப்போது நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு அதற்குரிய தண்டனையையும் பெற்று வந்தார்.

இவருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் மட்டும் 16 வழக்குகள் இக்காலங்களில் தாக்கல் செய்யப்பட்டன.

கடைசியாக 1999 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் யாழ். நீதிமன்ற பிரதம பொலீஸ் அதிகாரி எஸ் பண்டாரவினால் இவர் கைது செய்யப்பட்டார்.

இத்திருட்டுத் தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட இவரை மீண்டும் இம் மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

(இ-5)

---

## பெண் உதவியாளர் தேவை

மூன்று குழந்தைகளுக்குப் பாடம் (1 -ம், 2–ம், 3 -ம் வகுப்பு) சொல்லிக் கொடுப்பதற்கும் சிறிய குடும்பத்திற்கான சமையல் உதவி செய்வதற்கும் ஆரோக்கியமுள்ள பெண் உதவியாளர் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். உணவு தங்குமிடவசதி இலவசம்.

வீடியோ கலாமினி
அச்சுவேலி.

தொலைபேசி இல. 070 – 212431 (சி-11412)

---

## அறிவித்தல்

### கோம்பயன்மணல் மயானம்

இத்தால் சகலருமறிக்,

வண்ணை கோம்பயன் மணல் மயானம் இந்துக்களுக்குரியதாகும். இங்கு இந்துக்களின் சடலங்கள் தகனம் செய்யமட்டுமே அனுமதிக்கப்படுமென இத்தால் அறியத் தருகின்றோம். சடலங்களை அடக்கம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

கலாநிதி க. குணராசா
தலைவர்
(சி/11408) கோம்பயன்மணல் மயானம்.

---

# மரண அறிவித்தல்கள்

## ஸ்ரீபன் அழகராசா

60, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த ஸ்ரீபன் அழகராசா நேற்று (14- 03- 2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயமலரின் அன்புக்கணவரும், அஞ்சலா தேவியின் (ஆசிரியை மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை (15-3-2000) 9 மணிக்கு (பு.நே) நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டு பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனிதகொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அழகராசா ஜெயமலர்
(மனைவி)

60, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

(74479)

## சுடலைமுத்து அருள்ராஜ்

(அருள் நகைத் தொழிலகம் வவுனியா)

இல. 304, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுடலைமுத்து அருள்ராஜ் (13 — 03 — 2000) திங்கட்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நிகழ்வுகள் யாவும் வவுனியாவில் இன்று புதன்கிழமை (15-03-2000) நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள்
இது முதல் பாக்கியவான்கள்"
(வெளி — 14: 13)

தகவல்:
திரு. திருமதி சு. சண்முகராஜா
குடும்பம்.

அருள்நகைத் தொழிலகம்,
இல: 14/1, மில் றோட்,
வவுனியா.

(74483)

# புத்தாயிரம் ஆண்டில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
04 — 07 — 1920

இறைவன் நிழலில்
26 — 03 — 1999

வைத்திய கலாநிதி

## அமரர் மயில்வாகனம் சோமசுந்தரம்

(எம்.எஸ். மருந்தகம், சுந்தரம் பிறதர்ஸ்— உரிமையாளர்)

திதி: 15–03–2000

எண்ணரிய சேவையாற்றிய எம் இனியவனே
பண்ணிய செயலின் பலனது இதுவாய்
பாரினில் பண்புற்றோங்கினாய்
தண்ணளிய உன் கொடையை
தரணியெல்லாம் ஓம்புகின்றது
விண்ணரிய மகத்துவத்தின் மெய்மையிலும்
விண்ணனாய் வர விரும்பினாயோ?
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்
கண்ணியவானே விண்ணை விட்டு
மண்ணை நோக்கி ஓடி வாராயோ?

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மணல்தறை லேன்,
கந்தர்மடம்.

(74452)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## ஆறுமுகம் பத்மாவதி

(ஜெயந்தி)

அன்னை மடியில் 29- 12-1966
ஆண்டவன் அடியில் 15- 3- 1997

திதி 10– 4– 2000

ஆண்டு மூன்று சென்றதுவோ
எங்கள் பத்மாவே
ஆறவில்லை துயர் கண்களில் நீர் காயவில்லை·
எங்கள் குலத்தில் வந்துதிப்பாய்
எம் தெய்வமே பொல்லாத காலன்?
பஸ் வண்டியில் காத்திருந்தானோ?
உன் பிரிவால் வாடும்

தந்தை, தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

மருதன்கேணி தெற்கு,
தாளையடி.

(74339)

## நிதி ஒதுக்கீடு

காரைநகர், மார்ச் 15

திவசம் கடற்றொழில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் இவ்வாண்டுக்கு உரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் ஆறு லட்சத்து 15 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களுக்கு மாகாண ஆளுநரால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைத் துறைமுகம் புனரமைப்பு மற்றும் ஆழமாக்கல் வேலைகளுக்கு ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும்—

காரைநகர் நீலிப்பந்தனை கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைப்புக்கு 65 ஆயிரம் ரூபாவும்—

ஊர்காவற்றுறை கரம்பன் வீதி புனரமைப்பதற்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்—

காரைநகர், நாரந்தனை, எமரிந்தமுனைப் பகுதி விளையாட்டு மைதானங்கள் புனரமைக்க தலா 25 ஆயிரம் ரூபாவும்—

ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு பிரேத தள்ளுவண்டில் அமைக்க 75ஆயிரம் ரூபாவும்—

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-73)

## தண்ணீர்த் தாங்கி நிறுவ நிதி

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். மடத்தடிப் பகுதியிலும் நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையம் அருகிலும் இரு தண்ணீர்த் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியை யாழ். மாநகர சபை உறுப்பினர் மனுவல் மங்கள நேசன் மாநகர சபை உறுப்பினருக்கான நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

(ஐ-5)

## மெய்வல்லுநர் போட்டி

அச்சுவேலி, மார்ச் 15

அச்சுவேலி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை அதிபர் திருமதி ச. கனகராசா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதம பொறியியலாளர் கு. சிவபாலனும் கௌரவ விருந்தினராக கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரமும் சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பு. குணசிங்கமும் கலந்து கொள்கின்றனர்.

(ஐ-11)

* * *

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி-மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். செல்லையாவும் கலந்துகொள்வர்.

(இ-3)


## சித்திரக்கலை

வரைதலும்
வர்ணம் தீட்டலும்
அடிப்படையிலிருந்து
பயிற்சி
18-03-2000 சனிக்கிழமை
காலை 10.00 மணிக்கு
ஆரம்பம்.

**தூரிகை**
செங்குந்த வீதி,
கல்வியங்காடு.

(சி/11395)


சங்கானையில் விரைவில்

## பனம் பொருள்களின் விற்பனை நிலையம்

மூளாய், மார்ச் 15

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பனம் உற்பத்திப் பொருள்களின் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக பிரதேசச் செயலர் திருமதி. ப. திலகநாயகம் பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பகுதியில் பனம் பொருள் உற்பத்திகளின் விற்பனை மற்றும் பாவனையை அதிகரிக்கும் முகமாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விற்பனை நிலையத்தை சங்கானை நகரப் பகுதியில் அமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் ஒன்று தெரிவு செய்யப்பட்டதும் இவ் விற்பனை நிலையம் இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-99)

## இணைப்பதிகாரியாக பேராசிரியர் நியமிப்பு

யாழ். பிராந்திய இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் இணைப்பதிகாரியாக பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நாவல திறந்த பல்கலைக் கழக தலைமை அலுவலகத்தினால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தின் கல்வி மற்றும் பரீட்சை சம்பந்தமான விடயங்களுக்கு பொறுப்பாக இவர் செயலாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நாய்களுக்கு டிஸ்ரெம்பரா நோய்

கைதடியில் வளர்ப்பு நாய்கள் ''டிஸ்ரெம்பரா'' என்னும் வலிப்பு நோயின் தாக்கத்தினால் இறந்து வருகின்றன.

இந்த நோய்க்குரிய தடை ஊசி மருந்து இல்லையென்றும் வளர்ப்பு நாய்களைக் கட்டி வைத்து மற்ற நாய்களுடன் சேரவிடாது தடுப்பதே பாதுகாப்பான வழி எனவும் சாவகச்சேரி மிருக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

(க-74)

# மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவில்



## செல்வன் நடேசு ஜெகதீஸ்வரன்

(மகேந்திரன்)

மண்ணில்: 14 - 02 - 1964
விண்ணில்: 17 - 03 - 1997

திதி: 15 – 03 – 2000

எம் அன்புச் செல்வமே!
மூன்றாண்டுகள் சென்றாலும் எம்மால்
உன் நினைவை மறக்க முடியாமல் தவிக்கின்றோம்
எமது கண்ணீரை உந்தன் பாதத்தில்
என்றும் காணிக்கையாக்குகின்றோம்.

உந்தன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

பிரிவால் துயருறும்
அப்பா அம்மா

அக்கா குடும்பம்:– ஜெகதீஸ்வரி தெய்வேந்திரம்
அகிலன், சயந்தினி, ரஜீதா, அனுசன்
அண்ணன் குடும்பம்:- விக்கினேஸ்வரன் ரேவதி
அஜந்தன், மிதுஜா
தம்பி குடும்பம்:– வனராஜ் வத்சலா
துலக்சனா, நிதர்சனா — லண்டன்
தம்பி குடும்பம்:– ஜெயகோபி கலாவதி
கௌசிகா, துலக்சன் — வவுனியா
தங்கை குடும்பம்:– பாமினி சிவலோகநாதன்
தம்பிமார்கள்:- பிரபாகரன் (லண்டன்) சுரேசன்
சுபேந்திரன் (லண்டன்)

நவாலி அரசடி,
மானிப்பாய்.

(74459)

# புங்குடுதீவுஊடாக ஊர்காவற்றுறைக்கு பஸ் சேவை நடத்துமாறு கோரிக்கை

## பிரதேச சபைத் தலைவருக்கு மக்கள் மகஜர்

வேலணை, மார்ச் 15

யாழ். நகரிலிருந்து காலை ஊர்காவற்றுறை சென்று பின்னர் அங்கிருந்து புங்குடுதீவு, பெருங்காடு வரைக்கும் குறுகிய சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்ஸை முதலில் நேரடியாகவே யாழ். நகரிலிருந்து பெருங்காடு சென்று பின்னர் ஊர்காவற்றுறைக்குச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு புங்குடுதீவு வாழ் மக்கள் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தியிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்திருப்பதாவது—

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்வு ஏற்பட்டு மீளக்குடியமர்தலின் பின் யாழ். குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் புங்குடுதீவு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களிலும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. அதே போன்றே போக்குவரத்துச் சேவையும் சீர் செய்யப்படாமல் இருந்து வருகின்றது. இதனால் அரச கடமைகளும் சீரான முறையில் நடைபெறுவதில்லை.

ஆகையால் இங்கு வாழும் மக்கள் பல்வேறு நிலையிலும் பின் தங்கியவர்களாகவே வாழ்கின்றார்கள். அரச, சமூகநல சேவைகள் ஒழுங்காகவும் சீராகவும் நடைபெற வேண்டுமானால் அங்கு கடமைக்கு வரும் அரச ஊழியர்கள் நேரத்துக்கு வருவதற்கும் போவதற்கும் ஏற்ற வகையில் போக்குவரத்து அமைவது அவசியமானது ஆகும்.

எனவே யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை சென்று பின்னர் ஊர்காவற்றுறையிலிருந்து பெருங்காடு செல்லும் பஸ் முதலில் காலை 7.30 மணிக்கு யாழ். நகரிலிருந்து பெருங்காட்டுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து ஊர்காவற்றுறைக்குச் சேவையில் ஈடுபட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக் கோரப்பட்டுள்ளது. (இ-167)

# குருபூசையை முன்னிட்டு மாணவர் மத்தியில் போட்டி

சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசையை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, திருக்குறள், ஆத்திசூடி மனனப் போட்டி, பொது அறிவுப்போட்டி ஆகியவை நடத்தப்படவுள்ளன.

புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் இப்போட்டிகள் யாவும் ஏப்ரல் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (இ-5)


# கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் பிரதேச செயலர்
உயர்திரு. கேதீஸ்வரன்
அவர்களின் அன்புத்தாயார்

## திருமதி மணியம் இராசம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம், கோப்பாய்.

(74466)



# அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிய வேண்டியது. இதன் கீழ் காணப்படும் ஆதன அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனம் புலோலி கிழக்கு, பருத்தித்துறை

## திருமதி செங்கமலர் பாலேந்திரன்

ஆகிய எனக்கு நொத்தாரிசு சபா. ரவீந்திரன் அவர்கள் முகதாவில் 890 ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி சொந்தமானதாகும். இந்த ஆதனத்தை அறுதி விற்க என்னைத் தவிர வேறு எவருக்கும் எதுவித உரிமையும் கிடையாது என்று இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் தரப்படுகின்றது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி, பருத்தித்துறைக் கோயிற்பற்று, புலோலி கிழக்கு, மழவராயகுறிச்சியிறை 'செட்டிசீமா' இதற்கு நிலஅளவையாளர் வே. சிவரத்தினத்தால் 1956 பங்குனி 28 ஆம் திகதி 1587 ஆம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் 1 ஆம் இலக்கத்துண்டுக்கு நிபர (00 குளி 9 19/32) பூச்சியம் குளி ஒன்பதுடன் முப்பத்திரண்டில் பத்தொன்பது. எல்லை கிழக்கு குறித்த 1587 ஆம் இலக்கப் படத்தில் 2ஆம், 3 ஆம் இலக்கத்துண்டுகள். வடக்கு ஒழுங்கை, மேற்கு தருமமடத்துக்குரியாதனம், தெற்கு சின்னத்தம்பி நாகலிங்கத்துக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் மற்றுமடங்கல் யாவும்.

பாலேந்திரன் செங்கமலர்,
459, பிரதான வீதி,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(74465)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 21 — 02 — 1935 | 16 — 02 — 2000 |

## திருமதி யோசேப்பினல் சின்னத்துரை

(ஓய்வு பெற்ற Diet Stewardess யாழ். போதனா வைத்தியசாலை)

தும்பளையைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி யோசேப்பினல் சின்னத்துரை அவர்கள் 16-02-2000 அன்று காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. சூசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி. Professor செல்லப்பா தம்பதியரின் அன்பு மருமகளும், அக்னஸ், செபமாலையம்மா ஆகியோரின் பெறாமகளும், சின்னத்துரையின் பாசமிகு மனைவியும், ராஜ்குமார் (கனடா), தேன்மொழி (ஆசிரியை, யா/சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை; IIS, நெல்லியடி), மலர்விழி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், புனிதா (கனடா), இராமச்சந்திரன் (கனடா), அன்ரன் தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகா, அஜந்தன், அர்ஜூன் ஜனகன், தீபன், விஸ்வா, காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வாணி வினோத் ஆகியோரின் பெரியதாயாரும், தேவதாஸ், அமிர்தலீலி, ஜெயதாஸ், சுதாமதி, சந்தியாப்பிள்ளை, லூர்து சேவியர், காலஞ்சென்ற பற்றிமாசோதி மங்களம், இமாக்குலேற் ரஞ்சனி, ஸ்டீபன் ஜெயராசா, மேரி றெஜினா, மேரி கிறிஸ்ரி ஆகியோரின் அன்புத் தமக்கையாரும், செல்வமுத்து, குணசீலன், ஜெயசீலன், உத்தமசீலன், மின்னல்கொடி ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் மறைவை அறிந்து, எமது துயரில் பங்கு கொண்டு, ஆறுதல் கூறி, அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்து அஞ்சலி செலுத்தி அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் ஆத்மசாந்திக்காக 16-03-2000 வியாழக்கிழமை காலை 7—30 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செவ்வேத்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி மன்றாடுமாறும், 17—03—2000 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

செ. சின்னத்துரை
(ஓய்வூதியர்) கணவர்,

சத்திரங்கை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(74264)


# அடுத்தவாரம் முதல் முழுநாளும் செயற்படும்

சண்டிலிப்பாய், மார்ச் 15

வாரத்தில் இரு நாள்கள் மட்டும் இயங்கி வந்த ஆனைக்கோட்டை கூளாவடியிலுள்ள சிவில் நிர்வாக அலுவலகம், ஆனைக்கோட்டை பிரஜைகள் முழு விடுத்த கோரிக்கையை அடுத்து வாரத்தில் முழு நாள்களிலும் செயற்பட்டு வருகின்றது.

விமானப் பயணம், கப்பல் பயணம் ஆகியனவற்றுக்கு அவசியமாக விண்ணப்பிப்பவர்களின் நலன் கருதியும் குடும்பப்பதிவு பத்திரம் பெறுபவர்களின் நலன் கருதியும் சிவில் நிர்வாக அலுவலகத்தை ஒவ்வொரு நாளும் திறக்குமாறு மேற்படி பிரஜைகள் குழு இப் பிரிவு பாதுகாப்புப் படை இணைப்பதிகாரியிடம் கேட்டிருந்ததாக பிரஜைகள் குழுத் தலைவரும் உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான ந. சிவபாதம் தெரிவித்தார். (இ-135)

# கைதடியில் அதிசய செவ்வரத்தை

சாதாரண செவ்வரத்தைச் செடி ஒன்றில் பூக்களுக்குப் பதிலாக விதைகள் அடங்கிய மொட்டுக்கள் காணப்படுகின்றன.

இந்த அதிசயம் கைதடிச் சந்தியில் உள்ள நந்தரூபன் என்பவரின் வீட்டு வளவில் இடம்பெற்றுள்ளது.


# குரக்கன் தேவை

தொடர்பு:
அண்ணா பாம்
இணுவில்.

(சி/11401)



# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் ஆறுமுகம் ஜெயரத்தினம்

(இலங்கை வங்கி முன்னாள் உதவி முகாமையாளர்)

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 22-05-1937 | 10-04-1995 |

(திதி: 15—03—2000)

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டு
ஆண்டுகள் ஐந்து ஆனதுவே
ஆனாலும் ஆறலையே என் துயரம்
இன்னும் எத்தனையாண்டு இத் துயரில் நான் வாழ?
தங்கள் ஆத்மா இறைவனடியில் அமைதி பெற்றிட
என்றும் இறைவனை இறைஞ்சும் உங்கள்

குடும்பத்தினர்.

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(74464)

## குதூகல ஆரம்பம்

கரவெட்டி நுனுவில் பிள்ளையார் வீதியில்
**புதிய தொலைத் தொடர்பகம்**
*குறைந்த கட்டணம்! நிறைவான சேவை!!*
*இரவு பகல் சேவை !!!*
T.P No:- உள்ளூர் 070-213063
T.P No:- வெளிநாடு 0094 70 213063

**நுனுவில் பிள்ளையார் தொலைத் தொடர்பகம்**

*நுனுவில் பிள்ளையார் வீதி,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

உரிமையாளர்
செ. இராசதுரை

(74458)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் - பகுதி D

### கருத்தரங்குத் தொடர் - 08

**இடம்: புவியியற்றுறை மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம்**
**காலம் : 16.03.2000 (வியாழக்கிழமை) மாலை 2.30**
**தலைவர்: பேராசிரியர் க.சின்னத்தம்பி**
*(தலைவர், கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
**பொருள் : இலங்கையில் மீன்வளக் கல்வி - ஒரு நோக்கு**
**வழங்குபவர் : கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன்**
*(சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

*ப.சிவநாதன்*
செயலாளர் பகுதி - D

(C/11415)

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு பிற்போடுதல்

இன்று 15.03.2000 அதிர்ஷ்டம் பார்ப்பதாக இருந்த யாழ்.பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு தவிர்க்க முடியாத காரணத்தினால் 15.04.2000 அன்று அதிர்ஷ்டம் பார்க கப்படும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**செயலாளர்**
யாழ்.பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்
யாழ்.பல்கலைக்கழகம்.

(74493)

## புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்
## ST. PATRICK'S COLLEGE - JAFFNA

**எமது கல்லூரியின் 150ஆவது வருடாந்தக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் 17.03.2000 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தி னால் 13.07.2000ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.**

**- சீட்டிழுப்புக்குழு**
**பழைய மாணவர் சங்கம்.**

(74486)

## யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

**நாளை (16.03.2000) வியாழக்கிழமை பி.ப. 2.30மணிக்கு கல்லூரியில் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நடைபெறும்.**

**பழைய மாணவர் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

செல்வி கி.வீரசிங்கம்
தலைவர்

செல்வி ச.சசிகலா
செயலாளர்

(C/11418)

## OBITUARY

### SEGARAJASINGHE

A. ST. JOE JEEVAM SEGARAJASINGHE Attorney-at-Law formerly of Hultsdorf Colombo, beloved husband of Thilaga cherished father of Anusha, Prakash and Ashok dear father-in-law of leonard Segamanasinghe, Merly and Jacqueline (all of Canada) affectionate son of late Mr.&Mrs. J.C.Segarajasinghe, Jaffna, fond son-in-law of late Mr.&Mrs. M.Benjamin, Jaffna, passed away peacefully in Canada on 13.03.2000. He is the loving brother of Jeiam Ranchitham, Indran, Geetham, Mathuram, late Ariam, Bavanitham, Dr. Easwaran and Nimalan, brother-in-law of Juliet, H.M.Ernest, Dr.Mrs. Rita, E.R.Joseph, R.F.Thambinayagam, W.J.Xavier, Charmaine M.V.Jeyanathan, Dr.&Mrs. Zelina Ariyanayagam, late Basil Benjamin and Dr. Mrs. Nirmala, late Bala Nagalingam and Kamala and Mr.&Mrs. Elmo Shanthi Xavier.

Funeral in Canada.
No.31, Mountland Drive, Scarborough,
ONTARIO MIG 2N7, CANADA.

Informant:
**Jeiam J.C.Segarajasinghe**
(Brother)

57, Vembadi Road,
Jaffna.

(74481)

## பிரதித்தூதர் வருகை

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பிரதித்தூதுவர் திருப்பதி இன்றுகாலை பலாலியில் வைத்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மற்றும் இராணுவ அதிகாரிகளையும், பொலீஸ் அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இன்று பி.ப.2.30 மணிக்கு யாழ். அரச அதிபர், யாழ்.மாநகர சபை ஆணையாளர், பிரதேச செயலர்கள் ஆகியோரையும் பின்னர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், நூலகர் போன்றோரையும் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார்.

## நிறுவன தினம்

### சான்றிதழ் பெற இருக்கும் மாணவர் கவனத்திற்கு

1999/2000 கல்வியாண்டில் பயிற்சிநெறிகளை முடித்துக் கொண்ட மாணவருக்கு 25.03.2000 அன்று நடைபெற இருக்கும் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான முக்கியகூட்டம் 19/03/2000 (ஞாயிறு) அன்று காலை 9.30 மணிக்கு IIS தலைமையகத்தில் இடம்பெறும். பயிற்சிநெறியினை முடித்துக் கொண்ட அனைத்து மாணவர்களையும் தவறாது நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் கூடுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

* நிறுவன தினத்தில் சான்றிதழ் பெறஇருக்கும் மாணவர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து தமது பதிவினை மேற்கொள்ளல் அவசியம்.
* 9MS,3DCP,10E,11W பரீட்சை முடிவுகள் 16.03.2000 அன்று வெளியிடப்படும்.

*இயக்குநர்*
**IIS**

(C/11409)


## ராஜா

யாழ்ப்பாணம்
**ரசிகர்களே!**
**சூப்பர்ஸ்ரார் ரஜனிகாந்த், சௌந்தர்யா, நடிகர்திலகம் மற்றும் பலர்**
நடித்த
**படையப்பா**
காட்சிகள்
10.30, 2.00, 5.00

(C/11349)

## நாகம்ஸ்

**சுன்னாகம்**
**அஜித், சிம்ரன்**
நடித்த
**அவள் வருவாளா?**
(ரீஸ்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

(C/11282)

## லிபேட்டி

அச்சுவேலி
அஜித், ஜோதிகா, ரகுவரன், மணிவண்ணன்
நடிப்பில்
***முகவரி***
(பிரதிகள் தரமானவை)
காட்சிகள் – 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*

(74393)


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு நல்லதம்பி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் காரைநகர் பழையகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நல்லதம்பி நேற்றுமுன்தினம் (13.03.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் மங்களராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி, புனிதமலர், யோகநாதன், புஸ்பவதி, காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம், கிருபா, சொர்ணலிங்கம், பரமேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், பாலகிருஷ்ணன், செல்லத்துரை ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.03.2000) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ந.யோகநாதன்**
(மகன்)

பழையகண்டி,
காரைநகர்.

(74495)

## இரத்தினம் பஞ்சலிங்கம்

தாவடி தெற்கு கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினம் பஞ்சலிங்கம் நேற்றுமுன்தினம் (13-03-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசபூபாலநாயகியின் அன்புக் கணவரும் தயாளன் (கண்ணன்), ஸ்ரீபாலன், தர்சினி, இராசபாலன் (பாபு), தயாளினி (றயினா, இராமநாதன் நுண்கலைப்பீடம், இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் சிவபாக்கியம், காலஞ்சென்ற சொர்ணலிங்கம், தவமணி, செல்லமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தகுமாரன், நிர்மலா (ராதா) ஆகியோரின் மாமனாரும் சுபாசினி, சுதேசினி, றிபேக்கா, ராகவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-03-2000) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
**ப.இராசபூபாலநாயகி**
(மனைவி)

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(74456)

## திருமதி தையல்நாயகி இராசரத்தினம்

திருமதி தையல்நாயகி இராசரத்தினம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தரோடை சுப்பிரமணியம் - சிவக் கொழுந்து தம்பதியரின் புதல்வியும், லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி முன்னாள் அதிபர் Dr. A.V.இராசரத்தினம் (கோப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும் குமாரசிங்கம், காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ் சென்ற விக்னராசா ஆகியோரின் சகோதரியும் வைத்தியநாதன், பரமேஸ் வரி, சண்முகநாதன், மகேஸ்வரி, பத்மநாதன், ஜெகநாதன் ஆகியோ ரின் அன்புத் தாயாரும் குமாரசுவாமி, ஸ்ரீபதி, திலகவதி, பவானி, அருணா ஆகியோரின் அருமை மாமியாரும் யமுனா, யானகி, திலகேசன், கிரிசாந்தன், ஸ்ரீபிரணவேஸ்வரன், பிரசாந்தி ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2000) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு 12/1, 57ஆவது ஒழுங்கையில் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் ஐந்து மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. A.V.இராசரத்தினம்

12/1, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.

(C/11410)

## திருமதி குணேஸ்வரி பொன்னுத்துரை

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் சித்திரமேழி இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணேஸ்வரி பொன்னுத்துரை ஞாயிற்றுக் கிழமை அன்று கொழும்பில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் விஜயரட்ணம் (குலம் கிறீம் ஹவுஸ் ஊழியர்), மல்லிகாதேவி, விஜயரஞ்சன் (நகுலேஸ்வரா மகாவித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (15.03.2000) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முள்ளானை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வ.பொன்னுத்துரை**
(கணவர்)

சித்திரமேழி,
இளவாலை.

(74490)

## தம்பாப்பிள்ளை சிவசம்பு

சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை சிவசம்பு நேற்றுமுன்தினம் (13.03.2000) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் தம்பாப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவக் கொழுந்து, சிவப்பிரகாசம், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும் செல்வராணி, புற்பராணி (ஜேர்மனி), இரத்தினசபாபதி (ஜேர்மனி), தணிகாசலம் (லண்டன்), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புக் குரிய தந்தையும் கார்த்திகேசு, ஞானரத்தினம், யோகராணி, கலைச் செல்வி, விஜயகுமாரி ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும் உதய குமாரி, நந்தகுமார், வசந்தகுமார், உமாவதனி, சசிவதனி, தபோவதனி, விபுலன், ஜெதீபன், வசந்தராஜ், மதன்ராஜ், முரளிராஜ், காயத்திரி, தனராஜ், சிந்துஜா, சிவன்ஜா, சிவயா, சிவமய, சதன்யு, சபன்யா, சாருன்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் கீர்த்திகா, சிந்துஷா, சாரங்கன், பிருத்திவிகா, கௌசிகா, விதுஷிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுதுமலை இல்லத்தில் நடைபெற்று இன்று (15.03.2000) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ.வசந்தராஜ்.**
(பேரன் - இணுவில்)

எச்சாட்டி வைரவர் கோயிலடி,
சுதுமலை தெற்கு.

(74489)

# உடன்பாடு எட்டப்பட்டால்தான் வடக்கு - கிழக்கில் படை வாபஸ்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்15

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்று சுமுகமான உடன்பாடு ஒன்று எட்டப்பட்ட பின்னரே வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவத்தினர் வாபஸ் பெறப்படுவர் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் நேற்றுமாலை உரையாற்றுகையில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுக்கள் ஆரம்பிக்க முன்நிபந்தனையாக வடக்கு - கிழக்கில் இருந்து படைகளை வாபஸ் பெறுமாறு விடுதலைப் புலிகள் கோரினால் அதனை அரசாங்கம் ஏற்கமாட்டாது.

இருதரப்புக்களும் புரிந்துணர்வு அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தி அதில் முன்னேற்றம் ஏற்படும்போது யுத்த நிறுத்தத்தை கொண்டுவர அரசு முன்வரும். பேச்சுக்கள் வெற்றிபெற்று சுமுகமான உடன்பாடு எட்டப்பட்ட பின்பே படை வாபஸ் பெறப்படும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்பதில் அரசு விசுவாசமாகச் செயற்படுகின்றது. அவர்களும் இதில் விசுவாசமாக ஈடுபடுவர் என எதிர்பார்க்கின்றேன்.

அடுத்த ஆறு மாதகாலத்துக்குள் அரசு ஐ.தே.கவுடன் இணக்கத்துக்கு வர முயற்சிக்கும். இருதரப்பும் இணங்காவிட்டால் ஒருதலைபட்சமாக அரசு அரசமைப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டு வரும்.

ஓகஸ்ட் மாதத்தில் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அதற்கு முன்பாக இந்த இணக்க நிலையை ஏற்படுத்த முயற்சி எடுப்போம் - என்றார் ஜனாதிபதி.

## இராஜகிரிய சம்பவம்:

## 'வயர்லெஸ்' சகிதம் 4 புலிகள் இன்னமும் நடமாடுகின்றனர்

கொழும்பு,மார்ச்15

இராஜகிரிய காஸில் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் அணியில் இடம்பெற்றதாகக் கருதப்படும் நால்வர் "வாக்கிடோக்கி" மற்றும் ரி-56 ரக துப்பாக்கிகளுடன் இன்னமும் நடமாடுவதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று குற்றத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தாக்குதல் நடத்திய பின்னர் கொஸ்வத்தை, பொறலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களுக்கு அவர்கள் தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது என்றும் -

அவர்களைக் கண்டுபிடிக்க அந்தப்பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டு வருகின்றது என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார். (ஐ-3)



நேற்று நடைபெற்ற நீதிமன்ற அமர்வின் காட்சி.



நீதிமன்றுக்கு வெளியே கூடிய அன்னையர் கதறி அழுவதை முதற் படத்திலும் அங்கு கூடியிருந்த பெற்றோர் மற்றும் உறவினர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### நீதிமன்றுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றப்பட்ட சமயம் அங்கு கூடியிருந்த தாய்மாரில் பலர் ஒப்பாரி வைத்து அழுதனர். சிலர் மண்ணை வாரி வீசி எறிந்து படையினரைத் திட்டித் தீர்த்தனர். வேறுசிலர் மார்பில் அடித்துக்கொண்டு அழுதனர்.

"எம் பிள்ளைகளைக் கொன்ற நீங்கள் நாசமாய்ப் போக" என்று தாய் ஒருவர் விடாது திட்டியபடி இருந் ததையும் காணவும் கேட்கவும் முடிந்தது. (ஐ-3-9)

### படை அதிகாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் -

இன்று கூட அவர் சிகிச்சைக்குச் செல்லவேண்டியிருந்தது என்றும் -

அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஏனைய நால்வரில் கப்டன்களான மூவரும் இராணுவ உடையில் இருந்தனர். பொலீஸ் கான்ஸ்டபிள் சிவில் உடையில் வந்தார். (ஐ-3-9)

### படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

யாழ். நீதிமன்றங்களில் ஏற்கனவே நடந்த பலவழக்குகளில் சம்பந்தப்பட்ட சிப்பாய்கள் அவர்களின் பாதுகாப்பின் காரணமாக இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமையை அவர் சுட்டிக்காட்டினார்.

படையினரின் நலன்களை கவனிப்பதற்காக ஆஜரான கப்டன் சானக குலதுங்கவும் இதே மாதிரியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

விண்ணப்பத்தை நிராகரித்து நீதிவான் தெரிவித்ததாவது:-

தனது அரச பணியின் காரணமாக இடம்பெறும் உயிரிழப்பு ஒன்று தொடர்பாக அதற்குப் பொறுப்பான படையினரை இடம் மாற்றித் தடுத்து வைக்க அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் இடமுண்டு. ஆனால் இக்கொலைகளை அரச பணியின் கீழான உயிரிழப்பு என்று கருதுவதற்கு இடமே இல்லை. அவர்களின் உயிர்ப் பாதுகாப்புக் கருதி யாழ். சிறைச்சாலைக்குப் பதிலாக வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்துவைக்க உத்தரவிடுகின்றேன் - என்று நீதிவான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்கள் படையினரை இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைக்க உத்தரவிட்டமை தொடர்பாக கருத்து எதுவும் கூற நான் விரும்பவில்லை.

இவர்களை இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைப்பதற்கான உத்தரவை வழங்குவதற்கு இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று நீதிவான் தெரிவித்தார். வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அவர்களை அனுப்புமாறு உத்தரவிட்டு ஏப்ரல் 25ஆம் திகதிவரை விசாரணைகளை ஒத்திவைத்தார். (ஐ-3-9)

### தலை, நெஞ்சு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றை கருத்தில்கொண்டும், செம்மணியில் மனிதப் புதைகுழிகள் காணப்பட்ட இடங்களை அவதானித்ததில் இருந்தும், இவை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட நிபுணத்துவ அறிக்கைகளின் அடிப்படையிலும் இவை திட்டமிட்ட படுகொலைகள் என்று ஊகிப்பதற்கு போதிய காரணங்கள் இருப்பதாகக் கருதி, இம்மரணங்கள் கொலை எனத் தீர்ப்பளித்து மேலதிக விசாரணையை நடத்துமாறு குற்றப்புலனாய்வுப் பொலீஸாருக்கு உத்தரவிடுகிறேன்.

அத்தோடு செம்மணி விவகாரம் தொடர்பாக எனக்குத் தரப்பட்ட பணி பூர்த்தியாகிவிட்டது - இப்படி நீதிவான் தெரிவித்தார். (ஐ-3-9)

### ஐந்து படையினரே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

இதனையடுத்து -

செம்மணி விவகாரம் தொடர்பாக ஏற்கனவே யாழ்.நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்திருந்த கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகளான முன்னாள் படைச்சிப்பாய்களான சோமரத்ன ராஜபக்ஷவும் மற்றும் நால்வரும் பிரஸ்தாபித்திருந்த படை அதிகாரிகள் மற்றும் பொலீஸாரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட நான்கு படை அதிகாரிகளும், றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அரியாலையைச் சேர்ந்த இளம் தம்பதிகளான சுரேஸ்வரன், சுமதி ஆகியோரைத் தாக்கிக் கொலை செய்தமை; சடலங்களை மறைத்தமை -

இராசையா சதீஸ், மனோகரன் பாபு ஆகியோரைக் தாக்கி கொலை செய்தமை; அவர்களின் சடலங்களை மறைத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் சந்தேகநபர்களாக பிரஸ்தாப ஐவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாக அரச சட்டவாதி யசந்த கோத்தாகொட தெரிவித்தார்.

இது விடயமாக அவர் நீதிமன்றில் சமர்ப்பித்த 'பி' அறிக்கையில் முதலாவது சந்தேக நபராக கப்டன் ஹேவாகே ஜெயசிங்க லலித் துஷிதகுமாரவும் -

இரண்டாவது சந்தேக நபராக லெப்டினன்ட் யட்டகம கமகே அத்துல உதயகுமாரவும் -

மூன்றாவது சந்தேக நபராக முன்னாள் றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் பி.ஏ.சமரவிக்கிரமவும்-

நான்காவது சந்தேக நபராக கப்டன் விஜிதாகமகே டில்ஷான் சஷிக பெரேராவும் -

ஐந்தாவது சந்தேக நபராக கப்டன் சஜிந்த விஜயசிறிவர்த்தனவும்-

ஆறாவது சந்தேக நபராக முன்னாள் றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிளான அப்துல் நஸாரும் -

குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஆறாவது சந்தேக நபரான அப்துல்நஸார் சம்மாந்துறையில் வசிப்பதாகவும் -

அவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுவரை கைது செய்ய முடியவில்லை என்றும் -

அரச சட்டவாதி நீதிமன்றில் தெரிவித்தார்.

பிரஸ்தாப நபரைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பித்த நீதிவான் ஏனையோரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கால் ஊனமடைந்த இரண்டாவது சந்தேகநபர் சிகிச்சைகளுக்கு செல்ல ஏற்பாடு செய்யும்படியும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-9)

## வன்னி செல்ல அனுமதி கோருகிறார் டிலான்!

கொழும்பு,மார்ச்15

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரின் விடுதலை தொடர்பாக அவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளேன். எனவே அதற்காக வன்னிக்குச் செல்ல அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரியுள்ளேன்.

நீதி, அரசமைப்பு விவகார, தேசியநல்லிணக்க பிரதி அமைச்சர் டிலான் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையை அடுத்து வன்னி செல்லத் திட்டமிட்டுள்ளதாக அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியுள்ளார். (ஐ-3-7)


சுப்றா கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
கணக்கீடு
D.SAM
A/L 2000
கம்பனி 3.15 - 4.15
A/L 2001
வங்கிக்கணக்கிணக்கக்கூற்று
5 - 6
ஆரம்பம்:- 15-03-2000
புவியியல் வினாவிடை
வகுப்புகள் நடைபெறும்
(சனி,ஞாயிறு 5.00-6.00)
(74476)

நிரு
கோண்டாவில்
A/L 99/2000
தமிழ்
வினாவிடை
ஆசிரியர் -
திரு.ஆர்த்திகன்
புதன் – வெள்ளி
(6.15 a.m)
(74434)

நாளை ஆரம்பம்!
கம்பனி
A/L-2000
DAY CLASS
காலை 10.30
(புதிய நேரம்)
கணக்கீடு
D.SAM
D.M.I
யாழ்நகர்.
(C/11407)

ஸ்ரீ வல்லிபுரா
போட்டோ
SVP
* எதிர்வரும் 17-03-2000 அன்று கொழும்பிற்கு படச்சுருள்கள் அனுப்பிவைக்கப்படும்.
* புகைப்படப்பிடிப்பாளர்களின் கவனத்துக்கு
அண்மித்த மூன்று மாத காலத்துக்குள் உரிமை கோரப்படாது தனிநபர்களுடைய படங்கள் ஏதாவது தங்களிடம் இருப்பின் அதனைத் திருப்பித் தந்து உதவவும்.
T.P 070-212720
புலோலி நல்லூர்.
(74467)

HITECH
College of Computer Studies
Kulappitty Jn., K.K.S. Road,
Kokkuvil.
விசேட புதிய பிரிவுகள் ஆரம்பம்
❖ Visual Basic
❖ PC Hard Ware
விசேட கட்டணச்சலுகையுடன் மேற்படி வகுப்புகள் இவ்வாரமே ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களுக்கு உடன் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும். (74468)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.